S. 294

35

உ

சிவமயம்.

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

பஞ்சபூத சரக்குகளின்

பஞ்சமித்திரம் - நா.

இஃது

மதுரை யானைக்கல்தெரு வித்வான்

மூ. குழந்தைவேலுப் பிள்ளையவர்கள்

ஏட்டுப்பிரதியைவைத்து

மதுரை வித்துவான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று,

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ரா. ம.

குருசாமிக் கோனார்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரஸில்,

பதிப்பிக்கப் பெற்றது.

இதன் விலை) 1927 (அணா 14

ரிஜிஸ்டர் காபிரைட்

உ

சிவமயம்.

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

பஞ்சபூதசரக்குகளின்

பஞ்சமித்திரம் - ௩௱.

எல்லாமும் படைத்ததொரு அல்லாவைத்தான்
இணையடியைப் போற்றியே தெண்டனிட்டு
பொல்லாமை யில்லாத நபிமார்பாதம்
போற்றியே அனுதினமுந் துதித்துயானும்
கல்லான யீமானை நெஞ்சில் வைத்துக்
கருத்தூணி முன்னூறுங் கணக்கதாக
நல்லறிவா யெல்லாமும் பாடித்தேர்ந்து
நலமாக முன்னூறாய் நாடினேனே (௧)

நாடினேன் களங்கோடு செந்தூரந்தான்
நலமான மித்திரத்தின் செயலுங்கண்டு
கூடினேன் சத்துவகை உருக்கும்பாகம்
குணமான சரஉலையின் செய்கைபாகம்
வாடியே சத்துவகை செம்பெடுக்கும்
வளமான உலைபோடும் வண்மைபாகம்
ஆடினேன் பஞ்சமித்திரத்தின் சேதி
அடைவாகக் கண்டுநான் பாடினேனே (௨)

பாடினேன் அறுநூறு சுண்ணக்காண்டம்
பதிவாக அதைக்குருக்கி யிதிலேகொஞ்சம்
கூடினேன் துகைமித்திரம் தங்கமித்திரம்
கொடுக்கின்ற பாகமொடு குணமாய்ச்சொல்வேன்
வாடியே திரியாதே யென்னாலெல்லாம்
வகைகண்டு பாத்திட்டு மனதிலெண்ணி
தேடியே யெடுத்துமே செய்தாயானால்
திடமாக மகாநபி யாயிருப்பார்தானே. (௩)

இருப்பார்கள் மக்கத்தில் நபிகள்றெம்ப
இன்பமுற்று ஒருவருக்குஞ் சொல்லார்பாரு
வெறுப்பாகப் பேசிடுவா ரவர்கள்முன்னே
விரும்பியேநீ நிற்கவேண்டாம் பின்னே
முருப்பாக மனமிரங்கி வேலைசெய்தால்
முக்கியமாய்ச் சொல்லிடுவார் முற்றும்பாரு
வருப்பாக யிப்படிக்கி வேலைசெய்து
வண்மையாய்க் கண்டறிந்தனை யாகோபுதானே. (4)

நானாக மக்காவில் யிருந்தபோது
நாடியேன் யென்பேரு ராமதேவர்
போனேநான் மக்காவின் தேசந்தன்னில்
புகலறிய பதினாறு படியிலேறி
கோனான நபிமார்கள் புத்திசொன்னார்
குணப்பட்டுச் சுண்ணத்துச் செய்துகொண்டேன்
வானாக நபிமார்கள் யாகோபென்றார்
வடிவாக வெகுகாலம் வாழ்ந்திட்டேனே. (5)

நூல்தொகுப்பு.

வாழ்ந்திட்டேன் நபிமார்கள் வாதஞ்சொன்னார்
வடிவான வாதத்தை மனதிலுன்னி
தாழ்ந்திட்டுப் போகாமல் சாத்திரங்கள்
தாட்டிகமாய் வயித்தியர்கள் பிழைக்கவேண்டி
பாழ்ந்துமே யெழுநூறு பாடிப்பின்பு
பதிவாக அதைச்சுருக்கி ரெண்டுமுன்னூற்
காழ்ந்துமே அதைச்சுருக்கி ஐம்பத்தைந்து
கனிவாகப் பதினாறாய்ச் சுருதினேனே. (6)

சுருதினே னதுவெல்லாம் பானையாகும்
கனிவாக யிந்தநூல் முன்னூர்தானும்
பருதியே தடியாகும் பார்த்துக்கொள்ளு
பலபலவா யோசனைகள் பண்ணவேண்டாம்
உருதியா யிந்தநூல் முன்னூர்தன்னை
உழைதனுமே முன்னூலை ஓதுப்பார்த்து
வருதிபெறச் செய்தாக்கால் வாதமாகும்
வகையறியார்க் கொன்றுமில்லை உண்மைதானே. (7)

5.294

உண்மையா யேருழுது பயிர்நட்டாப்போல்
உருதிபெறஞ் சத்துதனிற் செம்பெடுக்க
வண்மையாய் வாழைவைத்துப் பலன்கொடுத்த
வரிசையொக்கும் பொன்செய்வார் மார்க்கமாகும்
தண்மையாய் வெள்ளைநூல் தனக்குச்சாயம்
தாக்கியதோர் வரிசையொக்குந் தங்கமாகும்
பெண்ணவளுங் கருத்தரித்த வாறபோல
புகலரிய ரசவாதம் பேணிப்பாரே (8)

துருசுசத்து கேந்திச்செம்பு

பேணியே யின்னமொரு சத்துக்கேளு
பேசரிது பேசுகிறேன் யிந்தநூலில்
காணியாந் துரிசியது பலமோபத்து
கனிவாகக் கல்வத்தில் பொடித்துமாப்போல்
வாணியாய்ப் புதுச்சட்டி தன்னிலிட்டு
வகையாக அடுப்பேத்தி யெரிக்கச்சாமம்
தாணியாய் நீரதுவும் வத்திப்போகும்
தந்தம்போல் வெள்ளைநிற மாகுந்தானே. (9)

ஆகுமே நீரினதோர் துருசுக்குத்தான்
அடைவாக ஒட்டிரெட்டி பரையினுதம்
வேகுமே அதிலிட்டுக் கல்வமிட்டு
விரும்பியே பழச்சாறு மூன்றுநாளும்
பாகுபெற விட்டரைத்து வில்லைகட்டி
பதிவாகக் கதிரில்வைத்துச் சொல்லக்கேளு
தாகுமே சுண்ணும்பு உப்புநேரே
தாட்டிகமாய் மேனிச்சார் விட்டுஆட்டே (10)

உப்புக்கட்டு.

ஆட்டியே புடம்போட்டுத் தெரிப்படங்கும்
அதையரைத்து முன்னீராமுன் வில்லைக்கு
வாட்டியே கட்டிவிடு உடனேதானே
வகையாகப் புடமிட்டு யெடுத்துக்கேளு
காட்டியே மேலங்கி தள்ளிப்பாரு
நலமாகக் கரிபோலே தூளாய்நிற்கும்
காட்டியே புதுக்குகையி லிட்டுநீயும்
கனிவாக உருக்கிடவே சத்துமாமே. (11)

சத்துதிறம் வெங்கலம்போற் தகர்ந்துகாணும்
சரியான சத்துத்தான் செம்பதாக
முத்துப்போ லிருக்கின்ற சத்திற்பாதி
முனையான சுடரைத்தான் காக்கியிட்டு
பத்துமே பாணிவிட்டுப் பதியஆட்டி
பலனாக வில்லைகட்டிக் கதிரில்வைத்து
சித்திபெற முன்கவசம் போட்டுநீயும்
சிறப்பாகப் புடமிட்டு யெடுத்துப்பாரே. (12

எடுத்திடவே கறுப்பாகும் யேங்கவேண்டாம்
யிதமாகத் திராசுதனில் தூக்கிவைத்து
அடுத்திடவே டங்கணமுஞ் சரியதாக
அதைநீத்தி ரெண்டாகப் பிரித்துநீயும்
குடுத்துஅதைச் செவ்வல்லிப் பூச்சாற்றாலே
குணமாகஅரைத்து வில்லை காயவைத்துப்
படுத்துமே ஓட்டிலிட்டுப் புடமுமிட்டுப்
பதிவாக யெடுத்துமே கல்வமிட்டே. (13)

குகை.

இட்டுமே பின்புசந் தாணிசேத்து
இதமாக முன்பூவா லரைத்துக்கொண்டு
பட்டுமே முன்போலே புடத்தைப்போடு
பதியவே வில்லையது சிவப்புமேறும்
நட்டுமே யெடுத்துப்பின் குகையைக்கேளு
நலமான குகையெடுத்து வைத்துக்கொண்டு
கட்டுமே கரியரைத்துத் துணியிலிட்டுக்
கனிவாகப் பாணியதால் தடவக்கேளே. (14)

தடவியே குகைக்குள்ளே பத்துச்சீலை
தடையறவே செய்துபின்பு கதிரில்வைத்து
அடவியே முன்போட்ட மருந்துதன்னை
அதில்வைத்து உருக்கிடவே செம்புமாகும்
கடவியே சந்தானி சேர்த்ததெல்லாம்
கனிவாக யிப்படிக்கிக் குகையில்வைத்துப்
படவியே உருக்கிட்டாற் செம்பெடுக்கப்
பதிவாக வந்துவிடும் பாகமாமே. (15)

பாகமாயிப்படிக்கிக் குகையில்லாமல்
பதிவாக வெருங் குகையில் வைத்துருக்கில்
யோகமாய்க் குகையதுவும் உருகிப்போகும்
உறுதிபெறச் செம்பதுவுந் தீஞ்சுபோகும்
தாகமாய்த் தவித்திட்டு மனம்புண்ணுகித்
தாட்டிகமாய்ச் செம்பெல்லாம் பொய்யதாகும்
யூகமா யின்னூலைப் பொய்யென்பார்கள்
உலுத்தரவர் சண்டாளர் உறுதிதானே. (16)

உருதியாய் முன்னெடுத்த கெந்திச்செம்பை
உத்துமே வெள்ளிதனை ஊதிக்கொண்டு
பருதிபோல் ஊதினதோர் வெள்ளிநாலு
பதிவாக முன்னெடுத்த செம்புஒன்று
கருதியே சேர்த்துருக்க மூன்றுமாத்து
கனிவாகத் தங்கமதை யிடையேசேர்க்க
நருதியே மாத்தேழு காணும்நல்லாய்
நலமாக வித்துமே செலவுசெய்யே. (17)

அயச்செம்பு.

செய்தபின்புமுன்னெடுத்த கெந்திச்செம்பை
செயமாக அயச்செம்பாய் சொல்லக்கேளு
பைதுமே செம்பிடைக்கி அரபொடியைவாங்கி
பதிவாகப் பழச்சாற்றில் திரிநாலுரா
நைதுமே கழுவியதைப் பின்புநீயும்
நலமாகக் காயவைத்துச் சொல்லக்கேளு
வைதுமே புதுக்குகையில் பாதியிட்டு
வடிவான செம்பொடித்து அதின்மேல்வையே. (18)

வைத்துமே அரபொடியை மேலேபோட்டு
வடிவாக உலையில்வைத்து உருக்கித்தீரு
கைத்துமே புட்டுப்போ லுருக்கித்தீரு
நலமான கல்வத்தி லுடைத்துநீயும்
நைத்துமே ரெண்டுக்கு மூக்கால்நாதம்
நாடியே வைத்துடைத்துப் பூச்சார்விட்டு
கைத்துமே அரைத்துவில்லை கதிரில்வைத்துக்
கனமாக முன்கவசங் கனக்கச்செய்யே. (19)

செய்நுமே உடனேதான் புடமுமிட்டு
செயம்பெறவே புதுக்குகையி லிட்டுநீயும்
பைதுமே பக்குவமா யுருக்கித்திரு
பதிவாகச் சத்துநின் று உருகும்பாரு
கைதுமே கல்வத்தி லிட்டுநீயும்
கனமாக சத்திடைசங் தாணிகூட்டி
வைதுமே அரைத்துநீமுன் குகையிலிட்டு
வகையாக உருக்கிட்டு வாங்கிப்பாரே. (20)

வாங்கிடவே அயக்கசடு கழிந்துபோகும்
வகையாகக் கல்வத்தி லிட்டுநீயும்
தாக்கிடவே பாதியெடு சுடரைத்தானும்
தாட்டிகமாய்ச் செவ்வல்லிப் பூச்சாருட்டி
பாங்கிடவே வில்லைகட்டிக் கதிரில்வைத்துப்
பதிவாகப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
சாங்கமாச் சந்தாணி நேராய்க்கூட்டிச்
சரியாக அரைத்துவில்லை கதிரில்வையே. (21)

உலை.

கதிரில்வைத்துப் புடம்போட்டு யெடுத்துக்கொண்டு
கனிவாக உருக்கசர உலைமைக்கேளு
பதிவான அரைச்சாணி னகலமாகப்
பார்த்துநீ குளிதோண்டி சாணுநீளம்
விதிவான குகையெடுத்து மட்டுப்பார்த்து
விதமாகப் பொத்தலிடு நுணிவிரலதாக
சதியாக அஞ்சுபொத்த லிட்டுநீயும்
தாட்டிகமாய்ப் புடம்போட்டு மருந்துவையே. (22)

மருந்துவைத்து முன்குளியில் வைத்துநீயும்
மயமாகச் சதிரக்கல் நாலுவைத்து
அருந்துமே நாளம்வைத்து ஊதுநல்லாய்
அதுஉருகி மணிமணியா யிறங்கும்பாரு
நருந்துமே மணியெடுத்து உடைத்துப்பார்த்து
நலமான செம்பெல்லாம் பொருக்கிநீயும்
வருந்துமே புதுக்குகையி லிட்டுநீயும்
வடிவாகக் காரமிட்டு உருக்கிடாயே. (23)

பஞ்சமித்திரம்.

உருக்கிடவே ரவியாகும் சிகப்புமெத்த
உறுதிபெறக் கல்மிசத்தை விலக்கக்கேளு
நருக்கிடவே அயச்செம்பி லிருக்குகின்ற
நலமான பஞ்சமித்திரம் நாடிக்கேளு
வருக்கிடவே படிகாரம் வெங்காரந்தான்
வளமான சாரமொடு யிந்துப்புத்தான்
தருக்கிடவே வளையலுப்பு அஞ்சும்நேராய்
தடையறவே தேனாலே அரைத்துக்கேளே. (24)

அரைத்துமே குழம்பாக்கி வைத்துக்கொண்டு
ஆதியாம் அகலிலிட்டுச் சொல்லக்கேளு
பரைத்துமே முன்குளியி லடியில்வைத்துப்
பதிவாகக் குகையிலிட்டு அயச்செம்பைத்தான்
நரைக்கவே நாளம்வைத்து ஊதித்தீரு
நலமாக உருகியது கீழிறங்கும்
கரைக்கவே மணிமணியா யிறங்கிநிற்கும்
கனகம்போல் நிறமாகுங் கண்டுகொள்ளே. (25)

கண்டுமே யிப்படிக்கிப் பாகமாக
கருணைவைத்துச் செய்துயெடு கனகம்போலாம்
பண்டுமே யிச்செம்பு நிறத்தைக்கேளு
பதிவான சூரியன்போல் நிறமுமாகும்
துண்டுமே அயச்செம்பாம் ரெண்டெடுத்துத்
துடியான வெள்ளியெட்டி லீய்ந்தாற்கேளு
வண்டுமே உருகியது மாத்துஆறு
வடிவான தங்கமதை யிடையேசேரே. (26)

இடைசேர்த்துத் தகடடித்து உரைத்துப்பாரு
யிதமாக மாத்தெட்டு நல்லாய்த்தோணும்
கடைபார்த்து வித்துமே செலவுசெய்து
கனிவான புடமிறங்குங் கண்டுகொள்ளு
தடைபடா யிவ்வேலை நிசமதாகும்
தனித்துமே மனதுதனில் உன்னிப்பாரு
விடையாகும் யாகோபு சொன்னநீதி
வெற்றிபெற வைத்துமே விரும்பிப்பாரே. (27)

அயச்செம்பு செந்தூரம்.

விரும்பியே அயச்செம்பு பலமுமொன்று
விதமான தங்கமொரு யிடையேசேர்த்து
அரும்பியே உருக்கியடி தகடதாக
ஆண்மையாய் ரெண்டுக்கு முக்கால்கெந்தி
கரும்பியே ரெண்டுக்குக் காலாம்வீரம்
கனிவான செவ்வல்லிப் பூச்சாருட்டி
தரும்பியே தகட்டுக்குப் பூசிப்பூசித்
தாட்டிகமாய்ப் புடம்போடக் கரியுமாமே. (28)

கரியென்று மயங்காமல் கல்வத்திட்டுக்
கனிவான சுடரைத்தான் பாதிசேர்த்து
வரிபாலே விட்டரைத்து வில்லைதட்டி
வண்மைபெறப் புடம்ரெண்டு போட்டுப்பாரு
துரிதமாய் வில்லையது சிவந்துபோகும்
சுகமாகப் பின்புதான் பொன்னுருக்கும்
அரியாயோ சேர்த்தரைத்துப் பூச்சாற்றாலே
அடைவாக வில்லைகட்டிப் புடத்தைப்போடே. (29)

புடம்போட்டு யெடுத்துப்பார் முருக்கம்பூப்போல்
புகழாக யிருந்திடும்காண் பிலக்கலும்
தடமிட்ட நபிமார்க ளாடுமாட்டு
தான்கண்டு உலகமதில் நம்பிச்சொன்னேன்
கடமீட்ட ஆறுபோல் வாதவெள்ளங்
கணக்கிட்டுச் சொல்லவே முடியாபாரு
தடமிட்டு நாள்பார்த்து உலகத்தோர்க்குத்
தடையறவே யெழுதினேன்யா கோபுநானே. (30)

நானென்று செந்தூரந் தனையெடுத்து
நாட்டிலே சொல்லாமற் சொல்லக்கேளு
வானென்று மதியிருபத் தைந்துருக்கி
மாசற்ற செந்தூரம் ஒன்றுதாக்கு
சானென்ற மாத்தென்ன பெட்டேகாலாம்
காவிக்கும் உப்புக்குங் கனமாய்நிற்கும்
ஊனென்று விற்றமே செலவுசெய்து
உறுதியா யிரதவித்தை தன்னைப்பாரே. (31)

தன்னையே பார்த்திடவே கெந்திச்செம்பு
தனைச்சொல்லிப் பின்புதான் அயத்தின்செம்பு
சன்னையாய்ச் சொல்லிவிட்டேன் பின்புதானும்
சரியான தங்கசெந்தூரஞ் சொன்னேன்
கன்னல்போல் சத்தெடுத்துப் பிரிக்கும்பாகம்
கனிவாகக் கண்டுமே பிரித்துக்கொள்ளு
இன்னபடி சாஸ்திரங்கள் ஓதித்தீரு
இடும்பாகச் சொல்லாதே யின்பம்பாரே. (32)

இன்பமுற்று யின்னூலை அழுத்திநீயும்
இதமான விருத்தியெல்லா மனதிலெண்ணி
துன்பமறச் சத்துவகை செய்துகொண்டு
துரிசறவே செம்பெடுத்து மதியிற்சேரு
மூன்பூவை நினைத்துமே துருசிற்சேர்த்து
முக்கியமாய் சத்துவகை முடித்துநீயும்
அன்பராய்த் திரிந்துமே சீவனத்தை
அடைவாகச் செய்திட்யா கோசொன்னாரே. (33)

சொன்னதொரு பாகம்போற் செய்துகொள்ளு
சுகமாகச் செய்யாட்டால் பொன்னுமில்லை
நன்னயமாய்க் கொட்டினாற் றேளேயாகும்
நலமாகக் கொட்டாட்டால் பிள்ளைப்பூச்சி
இன்னிலத்தில் சத்தெடுத்தால் பொன்னேயாகும்
இல்லாவிட்டால் கழுதையவன் மேய்ப்பான்பாரு
கன்னலாய் கேட்டேனென் றெண்ணவேண்டாம்
கனித்துமே முன்வேலை கருதிப்பாரே. (34)

கருதியே பயிரிட்டு உண்டுதேரு
களிப்பாக யில்லறத்தில் கனித்துவாழு
உருதியாய் உங்களுக்குப் புத்திசொன்னேன்
உற்றுமே வாதந்தான் மிகவும்பார்த்தேன்
நருதியே யென்றுசொல்லி உலகந்தன்னில்
நாடியே சொல்லாதே சிரிப்பாரப்பா
வருதியே பாகம்வந்தா லெல்லாமாகும்
வகையாக யாகோபு வசனித்தேனே. (35)

வசனித்தேன் யென்றைக்கு மிருக்கமாட்டார்
வடிவாக ஒருநாளில் மடிந்துபோவார்
தசனியா யிப்படிக்கி யிருக்கவென்றால்
தடையறவே ஒருவேலை செய்துகொள்வாய்
பிசகாமல் ரசவாதம் யேவலாகும்
பிரியமா யுண்டுடுத்தி வாழ்வார்காணும்
நசலாகத் திரிந்தாக்கா லாபமென்ன
நானறிந்த மட்டுக்கும் தான்சொன்னேனே. (36)

சொன்னதொரு அயச்செம்பை வைத்துக்கொண்டால்
சுருதிமுதல் நால்வேதம் வந்துநிற்கும்
நன்னயமா யுலகத்தோர் நம்புவார்கள்
நாடுதனில் நபிமாராய்த் திரியலாகும்
சின்னமில்லை யெல்லாமுஞ் சித்தியாகும்
சித்திபெற்றுச் சமாதிக்கு ளிருக்கலாகும்
முன்னமே சொன்னபடி போலேபாரு
மூனியான யாகோபு மொழிந்தார்தானே, (37)

மொழிந்திட்ட நபிமார்க ளாடுமாட்டை
முடியமட்டுங் கண்டுமே சோதித்தேறு
வழிந்துமே போகாமல் பாகத்தோடே
வடிவாகச் செய்துமே வைத்துக்கொண்டு
கழிந்துமே நபிபோலே தியானம்பண்ணு
கருதியே கர்த்தாவைப் பணிந்துபோற்றி
தழிந்துமே நன்மார்க்க மாகப்பேசு
தாட்டிகமா யாகோபு சொன்னவாறே. (38)

வாறுகேள் சிறிதுபேர் வாதிமார்கள்
வகையான மட்டங்கள் தெரியாதாலே
காறுமே மூலிகையிற் செம்பைத்தானும்
கனமாக உருக்கியே சாய்த்துச்சாய்த்து
பாறுலகில் வெள்ளிதனில் கொடுத்துருக்கிப்
பார்த்திட்டு மாத்தாறு கண்டுதென்பார்
சோறுபோல் நினைத்துமே யேங்கியேங்கி
சுட்டேனு னென்பார்கள் வாதிதானே. (39)

வாதிக்கு ஒருபுத்தி சொல்லக்கேளு
வகையான பச்சைமண்ணை வீடுகட்டி
நீதியாய் மேற்கூரை கட்டாதாலே
நிலவரமாய் மழைபெய்ந்து கரைந்துபோகும்
சாரியாய் சுட்டமண் கரையாதப்பா
சரியொக்கும் சத்துதனில் செம்பெடுத்தால்
கோரியே பொன்னுகும் கொடுத்துப்பாரு
குற்றமற யாகோபு குணஞ்சொன்னுரே. (40)

சொன்னதொரு செம்பெடுக்க அறியாமற்ருன்
சுடுவாதி செம்பைத்தான் களங்குசெய்து
நன்னயமாய் மதிசெம்பி லுருக்கிப்பார்ச்சி
நலமாக ஊதிடவே சிதறியோடும்
இன்னிலத்தில் சாஸ்திரங்க ளெல்லாம்பொய்யாம்
இதமாகப் பாடினு ரென்றுசொல்லி
கன்னலாய் வாதம்பொய் யென்றுசொன்ன
கருவான மடையருக்குக் கண்டுசொல்வேன் (41)

நாகசுத்தி.

சொல்லிடவே முன்வைத்த அயத்தின்செம்பை
சுகமாகப் பலம்நாலு குகையிலிட்டு
அல்லிடவே உருக்கிநீ லட்டாய்ச்சாய்த்து
ஆடமாக நாகமொன்று வாங்கிநீயும்
கல்லிடவே காண்டியிட்டு உருக்கிநீயும்
கனிவாக யிலுப்பைநெய்யி லுருக்கிஊத்த
மெல்லிடவே நாகமது சுத்தியாச்சு
மேதினியி லிச்சுத்தி அதிகமாமே. (42)

தங்கசுத்தி.

அதிகமாந் தங்கத்தைத் தகடடித்து
அடைவாகக் கற்காவி பழச்சாற்றுலே
வதிகமா யரைத்துமே குழம்பாய்வைத்து
வடிவாக வோட்டிலெழு திரமேகாச்சி
பதிகவே துவைத்திடவே சுத்தியாச்சு
பதமாக யெடுத்துமே வைத்துக்கொண்டு
கெதிபெறவே யிப்படிக்குச் செய்துகொள்ளு
கெடியான யாகோபு சொன்னவாறே. (43)

செந்தூரம்.

சொன்னதொரு முன்சொன்ன அயத்தின்செம்பு
சுகமாகப் பலம்நாலு குகையிலிட்டு
நன்னயமா யுருக்கியே குகையினோடே
நாடியே தூக்கிவைத்துப் பின்புநீயும்
முன்னமே சொன்னதங்கம் பலமுமொன்று
முன்னாடி யுருக்குமெள்ளத் தூக்கிப்பாரு
கன்னலாய் மணிபோலே உருகும்பாரு
கட்டுதற்கு நாகமதை ஊட்டக்கேளே. (44)

ஊட்டவே பலம்நாகம் நிறுத்துநீயும்
உடனரையாம் ரசம்சாரம் ரெண்டுமொன்றாய்
நாட்டவே பொடியாக்கி உண்டைபண்ணி
நலமான தங்கம்நின்று உருகும்போது
வாட்டவே கொடுத்திடுநீ தங்கம்வாங்கும்
வடிவாக உருக்கியது புட்டுப்போலாம்
தேட்டவே யிப்படிக்கிச் செய்யாப்போனால்
திடமாக ஓடிவிடுந் திண்ணந்தானே. (45)

திண்ணமாய் முன்வைத்த அயத்தின்செம்பு
சீர்பெறவே பலம்நாலு உருக்கிநீயும்
பண்ணவே முகம்பார்த்து நாகந்தங்கம்
பதிவாக உருக்கினதைச் செம்பில்தாக்கு
உண்ணவே உண்டுவிடும் உருகிநிற்கும்
ஓடாது காரியம் ஒன்றுதாக்கு
எண்ணமுடன் களங்காகும் ரவிநூற்றொன்று
யிதமாகக் கொடுத்திடவே பத்துமாற்றே. (46)

பத்தான மாற்றான களங்குதன்னைப்
பதிவாகச் செந்தூரம் பண்ணக்கேளு
சித்தான களங்கத்தைக் கல்வத்திட்டு
சிறப்பாக நொறுக்கியே உடைத்துநீயும்
முத்தான யிரதமது பலமுமொன்று
முன்னேயான நாதமொன்று யிட்டுநீயும்
கத்தாவின் செவ்வல்லிப் பூச்சாறூட்டிக்
கணக்காக யிருசாம மரைத்திட்டாயே. (47)

அரைத்துமே வில்லைபண்ணிக் கதிரில்வைத்து
அடைவாக ஓட்டிலிட்டு ஓடுமூடி
பரைத்துமே பெரியபுடம் போட்டெடுக்க
பதையாம லெல்லாமுங் கருத்துப்போகும்
தரைத்துமே கல்வமிட்டுத் தாரந்தன்னைத்
தடையறவே சுத்திசெய்து நாலத்தொன்று
கரைத்துமே போட்டரைநீ பூச்சாறுலே
கனிவாகக் குப்பியிட்டு மூடிக்கொள்ளே. (48)

மூடியே புத்துமண் ணேழுசெய்து
முடிவாக மேருவைத்து யெரிநால்சாமம்
தேடியே அருணன்போற் சிவந்துபோகும்
செகசால மாடலாங் தெரிந்துகொள்ளு
ஓடியே திரியாமல் றவிநூறொன்றில்
ஒக்கயிடு றவிபத்து மாத்துமாகும்
கோடியா மதிபழுக்கும் நவலோகங்கள்
கொடுக்குமுன்னே பழுத்துவிடுங் கொள்கைதானே. ()

கொள்கையாய்ப் பணவிடைதான் பாலிலுண்ணக்
குணமாகுந் தேகந்தான் கல்த்தூணாகும்
நல்கையாய் நோயெல்லாந் தவிடுமாகும்
நமனாகும் பசுநரம்பு ஓஷமின்னும்
உள்கையா யெலும்பெல்லாம் வச்ரம்போலாம்
உறுதியாய்ச் செந்தூரம் உயரஓடும்
தள்கையாம் விந்திருகி மணிபோலாகும்
சாற்றரிது செந்தூரத் தண்மையாமே. (50)

தண்மையாய்ச் செந்தூர முண்ணும்போது
தக்கதொரு பெண்தள்ளு உப்புந்தள்ளு
உண்மையாய்ப் புளிதள்ளி உண்டுதேறு
உறுதியாஞ் செந்தூரம் உண்மையாகும்
கண்மையா யொருவருக்குங் காட்டொணாது
காட்டினால் ரவிகோடி நரகமெய்தும்
வண்மையா யிந்தமுன்னூர் தன்னிற்றானும்
வடிவாகச் சொல்லிவிட்டேன் வரிசைபாரே. (51)

வரிசையாய்ப் பஞ்சிட்டுப் பாரமேத்தி
வடிவான ரசவாதம் வண்மையாகும்
உரிசையாய்ப் பொன்னுருந் தூசஒடும்
உண்மையாய் கபிமார்கள் சொன்னநீதி
பரிசையாய்ப் படபடத்துச் செய்தாயானல்
பகரரிது வந்தவித்தை ஓடிப்போகும்
நரிசையாய்க் குங்குமத்தைச் சுமக்கப்பட்ட
நலமான கழுதையொக்கும் நாட்டிலோர்க்கே. (52)

நாட்டிலே ரசவாத மென்றசொல்லு
நலமாக ஆண்டவரும் கபிமாரொக்கும்
ஏட்டிலே பார்த்தாலே யென்னசெய்ய
யிதமாக மனதுதனில் பாட்டைவைத்து
கூட்டிலே கிளிப்பிள்ளை அடைத்தாப்போலே
கூறிட்டுத் தனித்திருந்து பாகமாக
தாட்டிகமாய்ச் செய்துமே முடித்துக்கொண்டால்
சார்வாகும் பின்னூலின் தன்மையாமே. (53)

தண்மையா யிந்தமுன்னூர் ராசாவாகும்
தாக்கிடவே மந்திரியாங் கைபாகங்கள்
உண்மையாம் படைத்தலையர் கேள்வியாகும்
உறுதியொக்கும் உலைபாகங் கண்டறிந்து
வண்மையாய்த் துருப்பாகுங் காதிற்கேட்ட
வசனம்போற் செய்திடவும் வகையுமாகும்
கண்மையா மிவையெல்லாம் விட்டுச்சுட்டால்
கடனுளி யாயிருந்து கருதுவானே. (54)

கருதவே யிப்படிக்கி நூலைப்பார்த்துக்
கனிவாகக் கேள்வியைத்தான் கேட்டுத்தேறி
வருகவே சுடுவாதி தனையறிந்து
வாட்டமாய்க் கைபாக வரிசைகண்டு
தருகவே சாக்கினுட வலுவறிந்து
தாட்டிகமா யுலையூதுங் காத்தறிந்து
பருகவே குகையினுட பாகங்கண்டால்
பதிவான ரசவாதம் பதியும்பாரே. (55)

பதியவே யிப்படிக்கிப் பாராப்போனல்
பாகமது பாபாப்பாய்ச் செய்துகெட்டு
விதியென்று கரிசுட்டுக் கேட்டேனென்று
வீண்பேச்சுச் சொல்வார்கள் உலுத்தவாதி
கெதிவேரே யில்லையென்று வயித்தியம்பார்ப்பார்
கெட்டியாய் வாதம்போல் வயித்தியம்செய்து
சதியாகத் திரிந்தலேவார் கர்மியப்பா
தாட்டிகமா யாகோபு சொன்னேநானே. (56)

நாணுகச் செம்பொன்று நல்கக்கேளு
நாட்டிலே சொல்லாதே யிரும்பின்மார்க்கம்
தானுகத் தந்திடுமே செம்புதன்னை
தாட்டிகமா யதையெடுத்து வெள்ளிதன்னில்
மாணுகப் பாச்சிடவே மதிபழுக்கும்
மக்காவின் தேசத்து நபிமாரெல்லாம்
வாணுகச் செய்திடுவார் வழக்கமப்பா
வண்மையுள்ள யாகோபு வகைசொன்னரே. (57)

அயச்செம்பு.

சொல்லவே அயச்செம்பு சொல்லக்கேளு
சருதிதனே ஆருய்ந்தோர்க் கெய்தும்பாரு
நல்லவே துருசியது பலமும்பத்து
நலமான நாத்தமது முக்காலாகும்
வெல்லவே சுடர்க்கொடியோன் அரையுமாகும்
வீரமது பலங்காலாம் நிறுத்துக்கல்வம்
மெல்லவே யிட்டுமே பழச்சாறுலே
மெதுவாக நாளாறு அரைத்திடாயே. (58)

அரைத்துமே வில்லேகட்டிக் கதிரில்வைத்து
அடவாகக் காயவைத்துச் சொல்லக்கேளு
தரைத்துமே சுண்ணும்பு உப்புநேரே
தனேயரைத்து மேனியென்ற சாற்ருலாட்டி
பரைத்துமே வில்லேக்கி அங்கியிட்டு
பதிவாக முழம்புடத்தி விட்டுவாங்கி
முரைத்துமே துருசில்நின்ற செம்பெல்லாந்தான்
முடியவே செத்ததென்று பரிச்சைபாரே. (59)

பாரேநீ கரிதோண்டிக் கொஞ்சமிட்டுத்
பதருமா வுருக்கிமெள்ளப் பார்க்கும்போது
ஆரெநீ நீலம்போ லோடிப்போகும்
அடவான கரிதனிலே ஒன்றுமில்லை
வாரேநீ யிருந்துதென்றால் பாகமாகும்
வடிவாகக் கரிதனிலே செம்பிருந்தால்
தேரேநீ ரவிசாக யில்லையென்று
தேடியே முன்போலக் கொன்றிடாயே. (60)

கொன்றிட்டுப் பின்புதான் சொல்லக்கேளு
குணமான அரபொடிதான் ராவிநீயும்
அன்றிட்டுப் பழச்சாற்றில் மூன்றுநாளும்
அடவாக வூரவைத்துப் பின்புகேளு
நன்றியே பாணிவிட்டு அலம்பிநீயும்
நலமாகக் காயவைத்து நாட்டங்கேளு
கன்னியமாய்ப் புடம்போட்ட துரிசக்குத்தான்
கனிவாக யெட்டிலொன்று சேர்த்துக்கொள்ளே. (61)

சேர்த்துமே பழச்சாறு விட்டுஆட்டி
சிறப்பாக வில்லைகட்டி ரவியிற்காய
பார்த்துமே வைத்தெடுத்து ஓட்டிவிட்டு
பதிவாக சீலைமண்தான் பாகமாக
வாத்தியே செய்திட்டுப் புடமும்போட்டு
வகையாகப் பின்புதான் வண்மைகேளு
நாத்துமே சந்தானி யெட்டுக்கொன்று
நலமாகச் சேர்த்திட்டு நாட்டங்கேளே. (62)

நாட்டவே புடம்போட்ட அய்த்திறேடே
நலமாகச் சேர்த்துஅரை சாமமெட்டு
வாட்டவே பழச்சாறு விட்டுஆட்டி
வடிவாக வில்லைகட்டிக் கதிரில்வைத்து
தாட்டிகமாய் புதுஒட்டில் வைத்துமூடி
தனைச்சுத்தி மண்சீலை வலுவாய்செய்து
காட்டமாய்ப் புடம்போட்டு யெடுத்துக்கொண்டு
கணக்காக முன்குகையில் வைத்திடாயே. (63)

வைத்துமே உருக்கிடவே செம்புமாகும்
வகையான சூரியன்போல் நிறமுமாகும்
தைத்துமே யிச்செம்பில் வேதைகோடி
தாட்டிகமாய் மதியெட்டில் றெண்டுசேர்த்து
நைத்துமே உருக்கிமெள்ளப் பார்க்கும்போது
நலமாக மாத்தாறு போலேதோன்றும்
கைத்துமே தங்கமதை வைத்துருக்க
கனமாக யெட்டாகுங் கருதிப்பாரே. (64)

கருதியே யிதைவிற்றுச் செலவுசெய்து
கனகமென்ற அயச்செம்பு யிடைக்கித்தங்கம்
பருதியே யிட்டுருக்கித் தகடாய்த்தட்டி
பதிவான கெந்தகமும் வீரங்காரம்
கருதியே தங்கமிடை நிறுத்திக்கொண்டு
கலமானக் கல்வமிட்டுப் பழச்சாற்றாலே
உருதியா யரைத்துமே தகட்டிற்பூசி
உற்றுமே நொருங்கமட்டும் புடமும்போடே. (65)

புடம்போட்டு யெடுத்துப்பார் கரியாய்க்காணும்
புகழ்பெற்ற கரிக்கிநீ பஃதிகேளு
திடமான கொடிபோனைப் பாதிசேதது
திட்டமாய்ச் செவ்வல்லிச் சாற்றாலாட்டி
அடமாக யெடுத்துப்பார் புடமுமிட்டு
ஆதிகருஞ் சிகப்பாகுங் கல்வமிட்டு
தடமாகச் சந்தாணி பாதியிட்டு
தடயறவே பூச்சாற்றி லரைத்துக்கேளே. (66)

அரைத்துமே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
அடவாகப் புதுஓட்டில் வைத்துமூடி
தரைத்துமே புடம்போடு சிவந்துபோகும்
தனையெடுத்து கபிமாரைத் தோத்தரித்து
பரைத்துமே வெள்ளியெட்டில் மறெண்டுசேரு
பதிவான தங்கமாம் பாரிலோர்க்கு
புரைத்துமே வித்திட்டுச் சீவனங்கள்
புதுசாகச் செய்துமே பேசக்கேளே. (67)

பேசவே செலவுக்கு வைத்துக்கொண்டு
பின்புதான் முன்னெடுத்த அயச்செம்பைத்தா
வாசவே பலம்நாலு நிருத்துக்கொண்டு
வடிவாகத் தங்கமொன்று நாகமொன்று
தாசவே முன்போலே உருக்கிச்சேர்த்து
தாட்டிகமாய்க் கல்வத்திலிட்டுநீயும்
பாசவே பொடியாக்கி யிதுநேர்சூதம்
பாச்சிட்டு நாத்தமது யிடைதான்சேத்தே. (68)

சேர்த்துமே பொடியாக்கிப் பூச்சாற்றாலே
சிறக்கஅரை பனிரெண்டு சாமந்தானும்
பாத்துமே வில்லைகட்டிப் புதஒட்டிட்டு
பரிவாகச் சீலைமண் பதியச்செய்து
நாத்துமே புடம்போடு கருத்துப்போகும்
நலமாக யெடுத்துமே கல்வத்திட்டு
காத்துமே யெட்டுக்கு ரெண்டுதானும்
கனிவான தாளகத்தைக் கூடச்சேரே. (69)

கூடவே சேர்த்துமெள்ளப் பூச்சாற்றாலே
குணமாக அரைத்துமே வழித்துநீயும்
ஆடவே கதிரில்வைத்துக் குப்பிக்குள்ளே
அடவாக அடைத்துமே வாயைமூடி
நாடவே சட்டிதனில் மணலையிட்டு
நலமாக விரக்கிடைதா னுலதாக
பாடவே குப்பிக்கு யேழுசீலை
பதிவாகச் செய்துமே பகரக்கேளே. (70)

பகரவே சட்டிதனில் மணலைவைத்து
பதிவாகச் சுத்திவர மண்ணையிட்டு
சகரவே விரக்கடைதா னெட்டதாக
தாக்கியே மண்ணைத்தான் தன்மையாக
வகரவே அடுப்பேத்திச் சாமங்கேளு
வடிவாகப் பனிரெண்டு சாமந்தீதான்
நகரவே யெரித்திட்டு அடுப்பையாத்து
நலமாகக் குப்பியெடு நாடிப்பாரே. (71)

நாடிப்பார் குப்பியைநீ உடைத்துப்பாரு
நலமாக மாதளம்பூ போல்சிவக்கும
கூடியே யெடுத்துநீ பாத்தியாவை
குணமாக ஓதியே குறியதாக
தேடியே செம்புநா ரென்றுருக்கி
திடமாகச் செந்தூர மொன்றயிப
பாடியே பத்தரைதான் மாத்துமாகும்
பாகமா யாகோபு பயின்றார்தாமே. (72)

தானென்ற செந்தூரம் நபிமாருக்கு
தாட்டிகமா யாகுமென்று யாகோப் சொன்னார்
வானென்ற உலகத்தோர்க் காகாதாகும்
வடிவாகச் செய்தாக்கால் மரணமாகும்
ஊனென்ற உலகத்தோர் களங்குசெய்து
உறுதியாய்ப் பிழைக்கலாம் உற்றுப்பாரு
நானென்ற ஆணுவத்தாற் செய்யவேண்டாம்
நபிமார்க ளாடுகிற ஆட்டந்தானே. (73)

ஆட்டான கேள்வியினால் வாதஞ்சுட்டு
அறியாமல் நான்கெட்டே னென்றுசொன்னால்
பாட்டான பாட்டைத்தான் படிப்பார்மூடர்
படிப்பில்லை தினையளவு பொன்னைக்காணார்
நீட்டான நூலறிந்து படித்துச்சுட்டால்
நிலைக்குமே ஒருதொழில்கள் நிசமதாகும்
கேட்டாக்கால் வாதந்தான் சொல்லுவாரோ
கேள்வியினால் சுடவேண்டாம் உலகத்தோரே. (74)

உலகத்தில் வாதமென்றாற் சிரிப்பார்மூடர்
உள்ளுணர்ந்து அறியாத மயக்கத்தாலே
பலகத்தும் பலனில்லை அறிவில்லாதார்
படுபாவி கன்னிகையைத் தொட்டதாலே
நிலமுழுதால் பயிராகும் உழுகரதாலே
நின்றபயிர் முளையாது நிலமைபாரு
கலகத்துப் பேசாதே வாயைமூடு
கருமியவன் செவிதனிலே காட்டாவாறே. (75)

காட்டவே விவேகமுள்ள சீஷனுக்கு
கனமாக யிந்தநூல் தன்னைக்காட்டு
வாட்டவே சத்துனிட வளமைதன்னை
வளமாகப் போதித்து செம்பைக்காட்டு
மாட்டவே பாவமில்லை சீஷன் தன்னை
மதிபார்த்துச் சோதித்து வசனங்களு
தேட்டாண்மை யானதொரு சீஷனுக்கு
திரமாகச் சொல்லியே தோய்ந்துபாரே. (76)

உறுதியில்லார்.

தோய்ந்துமே சிறிதுபேர் தொண்டனாக
தொல்லுலகிற் பேசுவார் அவர்களோடே
மாய்ந்துமே திரியாதே மதிமயங்கி
மனதாகச் சத்துவகை பாதிபோட்டு
ஆய்ந்துமே உனக்கென்ன தெரியுமென்று
அவதியாய்ச் சொன்னாக்கால் அடுத்துநன்றால்
வாய்ந்துமே நல்லமனம் போலேபேசி
வடிவாக முன்போலே மருந்துசெய்யே. (77)

செய்யவே சத்தெடுக்கச் சத்தைக்கேட்டு
செயமாகக் கல்வமிட்டு வெங்காரத்தை
பையவே ஒட்டிக்கி ரெட்டிதானும்
பதியயிட்டு நல்லவன்போ லரைக்கச் சொல்லு
நையவே அரைத்திட்டுக் காயவைத்து
நலமாகக் காடையென்ற புடத்திலிட்டு
கையினா லவனைநீ யெடுக்கச்சொல்லி
கருத்தாகச் சொல்லிவிட்டு அப்பால்நில்லே. (78)

அப்பாலே நின்றுமே அறிக்கைசொல்லு
ஆதியாம் புதுக்குகையில் வைக்கச்சொல்லு
மூப்பாலா யுலையில்வைத்து ஊதச்சொல்லு
முயற்சியாய் வெங்காரங் கசிவுகண்டு
தப்பாமல் குகையதனை உருக்கிக்கொண்டு
தடையறவே நெருப்பதனி லிறங்கிப்போகும்
வப்பாலே குகைதூக்கு மென்றுசொல்ல
வடிந்துமே மணிமணியா யிறங்குந்தானே. (79)

இறங்கியே நெருப்பதனில் சத்துத்தீயும்
நிலவரமாய் நானென்ன செய்வேனென்று
துறங்கியே சொல்லிவிட்டு முன்னைப்போலே
துடியான பணம்போட்டுச் சரக்குவாங்கி
அறங்கியே சொல்லிடுநீ யிப்படிக்கி
அடைவாக அவனுக்குச் செய்யவேதான்
நிறங்கியே முடியபட்டு மித்திரம்பண்ண
நிசமாக அவனசந்து போவான்தனே. (80)

தானென்று சொன்னதொரு பேச்சுக்கேட்டு
தவித்திடுவான் உன்னினவைக் கெட்டிபண்ணு
ஊனென்று அவனலுத்துப் போவானப்பர
உற்றுமே மனதிலெண்ணி அப்பாலேகு
வானென்ற வாதெல்லாங் குரைந்துவெட்கி
வழியோடே வந்தாலுஞ் சொல்லவேண்டாம்
பானென்ற பலனுள்ள சீஷன்பாரு
பகுத்தறிவால் சொன்னுக்காற் பலனுமாமே. (81)

பலனுக முன்சொன்ன செந்தூரத்தை
பணவிடைதான் தேனிலுண்ணு மண்டலத்தில்
பிலனுகும் விந்திருகும் மேனிதானும்
பேசரிய செவ்வலரிப் பூப்போலாகும்
அலனுக நரம்பிருகும் துளிராமேனி
ஆதிமுத லாண்டவர்போல் திரேகமாகும்
கலனுக நெஞ்சமுத்த மாகுங்கண்டீர்
கனிந்துமே யாகோபு கருதினரே. (82)

கருதியே மண்டலமும் அந்திசந்தி
கருணைபெற உண்டிடுநீ கருத்தைக்கேளு
வருதியே உப்போடு பெண்ணுமாகா
வடிவான புளியாகா மயக்கமாகா
நிருதியே பூசனிக்காய் பாகற்காயும்
நிலையில்லாப் பறங்கிக்காய் தானுமாகா
உருதியாய் நல்லெண்ணை யாகாதென்று
ஓதினர் யாகோபு உறுதிதானே. (83)

உருதியுற்றுச் செந்தூரஞ் செய்துகொள்ளு
ஓதரிய மகமதுவைத் துதித்துப்போற்று
கருதியே கோரானை நித்தம்மூன்று
காலமே தொழுதுநீ கருணைவைத்து
அருதியாய் உலகத்தி லடக்கமாக
ஆண்மையாய் வாழ்ந்துமே அநேககாலம்
சருதியாய் நினைவுதனைச் சிந்தித்தேற
தாட்டிகமா யாகோபு தண்மைதானே. (84)

தண்மையாய் மக்காவின் தேசந்தன்னில்
தடையில்லா நபிமார்கள் மெத்தஉண்டு
உண்மையாய் மகமதுவைத் துதிப்பாரப்பா
உருதியாய் வாதங் கைகட்டிநிற்கும்
வண்மையாய் வாய்பொத்தும் நினைத்ததெல்லாம்
வாசனையாங் கைகூடும் வழக்கமாகும்
துண்மையெனச் சொல்லிவிட்டேன் மூன்னூர்தன்னில்
சூதறிந்து பார்த்தாலே தோய்வுமாமே. (85)

தோய்வாகப் பார்த்துமே பாகந்தன்னை
தொல்லுலகில் மகாயோகம் வந்துகூடும்
நாயமார் சித்தங்கள் ரெம்பவுண்டு
நானறிந்தே னதுகண்டு உலகத்தோர்க்கு
மாயமாய்ப் போகாமற் சொல்லிவிட்டேன்
மதியைநினை மயங்காமல் மார்க்கம்நின்று
தாயமா யிருந்துமே சத்தைப்பார்த்தால்
தாட்டிகமாய்ப் பொருளெல்லாம் வந்துசேரும். (86)

சேரவே கிழக்கிலுள்ள தேசத்தோர்கள்
சித்தாக மகமதுவைத் துதிக்கமாட்டார்
வாரமாய்ப் பள்ளிக்கிப் போகவேணும்
வாயாலே சொல்லிடுவார் நெஞ்சிலில்லை
கோரமாய்ச் சொல்லிடுவார் கோரான்தன்னை
கொடுத்தாலும் வாசிக்க அறியாமூடர்
பாரமா யிவர்களுக்கு நாயன்றானும்
பாதிமட்டுந் தரித்திரியம் பண்புமாமே. (87)

பண்பாக ஆண்டவனைத் துதியாமாந்தர்
பலனில்லை அவர்களுக்கு யிரணங்கொஞ்சம்
கண்பார்வை சத்துகளை யறியாமூடர்
கனிவான செல்வமில்லை காணியில்லை
உண்பாரை உடுப்பாரைப் பார்த்துயேங்கி
உறுதியற்றுப் பிச்சைதான் வாங்குவார்கள்
தண்பாக வெறிகொண்ட சண்டாளர்க்கு
தடையுண்டு யாகோபு சொன்னார்தானே. (88)

தானென்று யின்னமொரு சத்துச்செம்பு
சாணுறம் செய்ததுவை யிந்தநூலில்
கானென்று சொல்லவே கண்டுகொள்ளு
கணக்கான சாரைக் காசுதன்னை
வானென்று சொல்லுகிறே னுற்றுக்கேளு
வடிவான மாத்ததுவும் உசத்திமெத்த
நானென்று முன்னூரிற் சொல்வேன்பாரு
நபிமார்கள் சொன்னதுவை நாடிப்பாரே. (89)

துரிசுச்சத்து.

நாடிப்பார் துரிசதுவும் பலமும்பத்து
நலமான நாத்தமது யிடையும்ரெட்டி
கூடிப்பார் எலுமிச்சம் பழச்சார்விட்டு
கூசாம லிருசாம மாட்டிநீயும்
தேடிப்பார் வில்லைகட்டிக் கதிரில்வைத்துத்
திடமாக வில்லைக்கிக் கவசங்கேளு
பாடிபெய சுண்ணும்பு சேருரெண்டு
பதிவான கல்லுப்பு சேருரெண்டே. (90)

ரெண்டோடு மேனியென்ற சாத்தாலாட்டி
நிலைக்கவே புடமிட்டுக் கல்வத்திட்டு
பண்டோடு மேனியென்ற நீராலாட்டி
பதியவே அரைத்துமைபோல் பாகங்கேளு
கண்டோடு புடம்போடத் துருசுவில்லை
கனிவாக மேற்கட்டிக் கணக்கதாக
முண்டோடு அதின்பேரில் மண்ணுசீலை
முக்கியமாய்ச் செய்து உடன் புடத்தைப்போடே. (91)

புடம்போட்டு யெடுத்துப்பார் கரியாய்நிற்கும்
புகழாகக் காரமது யெட்டிலொன்று
தடம்பொரித்துப் போட்டுமே அரைத்துருக்கு
தடையறவே வெங்கலம்போற் சத்துமாகும்
படமாகச் சத்துநிற சத்துக்காலில்
பதியயிடு வீரமதைப் பார்த்துநீயும்
நடமாகக் கல்வத்தி லிட்டுநீயும்
நல்லாகப் பாணியினு லரைத்திடாயே. (92)

அரைத்துமே வைத்துப்பார் மஞ்சள்போலே
அடைவாகப் படர்ந்துவரும் பின்புகேளு
வரைத்துமே கள்ளமது போக்கிநல்ல
வடிவான சேரெடுத்து மார்க்கங்கேளு
தரைத்துமே ஆட்டமுரி படியும்ரெண்டு
தனிலுருக்கி யிருபத்தி ஒன்றுசாய்க்க
பரைத்துமே சுத்தியாம் கசடுநீங்கும்
பாகமதைச் சொல்லுகிறேன் பாரிலோர்க்கே. (93)

பாரிலே கல்வமிட்டு நய்யக்கட்டிப்
பதிவான சோறுதனில் கடுக்காயிட்டு
ஊரியபின் சோறுமது தெளிந்தநீராம்
உத்துஅரை வில்லேகட்டி சாமம்நாலு
தாரியபின் கதிரில்வைத்துக் காயப்போடு
தாட்டிகமா யகலில்வைத்துப் புடத்தையிட்டால்
காரியம்போ லுருகியது மணிபோல்நிற்கும்
கருணைவைத்து யெடுத்துமே கல்வத்திட்டே. (94)

இட்டுமே முன்சோறு தெளிந்தநீரால்
இன்பமுடன் பனிரெண்டு சாமமாட்டி
கட்டுமே வில்லைபண்ணிக் கதிரில்வைத்துக்
கனிவாக அகலிலிட்டுப் புடத்தைப்போடு
நட்டுமே யிப்படிக்கி அஞ்சுபோடு
நலமாகச் சிவந்துமஞ்சள் போலிருக்கும்
கிட்டுமே வாதமது கொள்ளையாகும்
கிருபைவைத்தார் யாகோபு கொள்கைதானே. (95)

கொள்கையாய் முன்வைத்த துருசிச்சத்தில்
குணமாக வீரமது சேர்ந்ததோடே
கள்கையாய் செந்தூர மஞ்சள் தன்னைக்
கணக்காக நாலிலொன்று கண்டுதேறு
வள்கையாய்க் கல்வமிட்டுப் பாணியாலே
வளமாக அரைத்துவில்லை கதிரில்வைத்து
உள்கையா யகலிலிட்டுப் புடமூன்றிட்டு
உறுதிபெற வெடுத்துப்பார் சிகப்புமாமே. (96)

ஆமிந்தச் செகப்புதனை யெடுத்துப்பார்த்தால்
அல்லாவைப் போலாகும் நபிமார்சொன்னார்
காமிந்த வெள்ளியது நாலுருக்கிக்
கணக்காகச் செந்தூர மூன்றுதாக்கு
வாமிந்த உருகியது வாங்கிக்கொள்ளும்
வடிவாகத் தங்கமது ஒன்றுகூட்டி
நாமிந்தப் படியாக ஊதிப்போடு
நபிமார்கள் சொற்போலே தங்கமாமே. (97)

தங்கமாம் யிதைவிற்றுச் செலவுசெய்து
தடையறவே செந்தூரஞ் செய்யக்கேளு
பங்கமாய்த் தங்கத்தில் ஒட்டிசெட்டிப்
பதிவாக யீய்ந்துருக்கி ஊதிப்போடு
அங்கமாய்த் தகடடித்துப் பின்புநீயும்
அடைவான கெந்தகமும் வீரமிட்டு
துங்கமாய் முன்னிடையாக் கல்வமிட்டுத்
துடியாக அரைஅன்னந் தன்னால்தானே. (98)

தன்னாலே ஆட்டிநீ யிருசாமந்தான்
தடையறவே தகடுக்கு மேலேகட்டி
கன்னாகக் கதிரில்வைத்துக் காயப்போட்டுக்
கருணையாய்ப் புடமிட்வே கொறுங்கும்நல்லா
நன்னாக நொருங்கமட்டும் புடத்தைப்போடு
நலமாக வெடுத்துமே கல்வத்திட்டுப்
பின்னாலே சுடரைத்தான் பாதிசேர்த்துப்
பிற்பாடு பூச்சாறு விட்டுஆட்டே. (99)

ஆட்டியே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் புதுஓட்டில் வைத்துமூடி
நாட்டியே புடமிடவே நன்மையாகும்
நலமான சந்தாணி யிடையேசேர்த்து
கூட்டியே பழச்சாறு விட்டுஆட்டி
குணமாக வில்லைகட்டிப் படமுமிட்டுத்
தாட்டிகமா யெடுத்துப்பார் செம்புமாகும்
தடையில்லை தங்கத்தின் செயலுமாமே. (100)

செயலாக வெள்ளிபத்தி லொன்றயீயச்
செழுமைபெறச் சாணாரக் காசுமாகும்
அயலார்கள் ஒருவருக்குஞ் சொல்லிடாதே
ஆனந்த மயமாக னின்றுதேறு
நயமாக வித்துமே செலவுசெய்து
நானிலத்தி லிருந்துமே பொறுமையாகத்
தயலாக நபிமாரைக் கண்டுபோற்று
தாட்டிகமா யாகோபு சொன்னவாறே. (101)

சொன்னதொரு நல்லோர்க்கு வாதமுண்டு
சொற்பெரிய செம்புண்டு தங்கமுண்டு
நன்னயமாய்ச் செல்வமுண்டு நடக்கையுண்டு
நானிலமும் அவர்களுக்கு நன்மையுண்டு
இன்னபடி நபிமார்போ லியற்கையுண்டு
இருந்தவிடந் தன்னிலே இயல்புமுண்டு
தன்னிரில் சித்தியுண்டு நன்மையுண்டு
தாக்கான மனமுண்டு தாக்கிப்பாரே. (102)

தாக்கிப்பார் கருமிக்கி வாதமில்லை
தாட்டிகமாய்ப் பேசுவார் ஒன்றுமில்லை
தூக்கியே சொல்லிடுவார் உலுத்தமாண்பர்
துணையில்லை அவர்களுந்தான் துலைந்துபோவார்
நோக்கியே அலைவார்கள் வீணிற்செய்து
நுணுக்கத்தைக் காணாமல் அலைந்துகெட்டு
பாக்கியததை வாதத்திற் சிலவுசெய்தேன்
பலனில்லை யென்பார்கள் பாரிற்றானே. (103)

பாரிலே வாதங்கள் பொய்யதென்றால்
பாக்கியமும் பொய்யாகும் பாரிலோர்க்கு
ஊரில்நின்ற ஆண்டவனும் பொய்யதாகும்
உறுதிபெற்ற நபிமார்கள் பொய்யதாகும்
காரில்நின்றும் பொய்சொல்லார்க் கெய்தும்பாரு
கருத்துடைய செல்வம்வரும் காட்சியுண்டாம்
சோறில்லா தவர்களுக்குத் தூக்கமுண்டோ
சுத்தரச வாதிக்கி யெய்துந்தானே. (104)

ஞாயம்.

எய்தவே துரிசுக்குள் செம்பைக்கொள்ள
யெத்தனைநா ளலைந்துமே கெட்டுத்தேறி
பய்யவே நபிமாரை அடுத்தேனப்பா
பகரரிய நபிமார்கள் வெகுநாட்சென்று
வையகத்திற் கெந்தியுடன் வீரஞ்சேர்த்து
வகையாகக் கொல்லென்று வழியுஞ்சொன்னார்
கொய்துமே நல்லதென்று அரைத்துப்போட்டேன்
குணமாகக் குகையில் வைத்து உருக்கினேனே: (105)

உருக்கையிலே நீலம்போ லோடிப்போச்சு
உத்துமே கரியைநான் பார்த்தேன்பாவா
பெருக்கவே ஒன்றுமில்லாப் போனதாலே
பேணியே நபிமாரை அடுத்துக்கிட்டப்
பருக்கிடவே நின்றுஅடி பணிந்துகேட்டேன்
பகைத்தார்கள் தயவுநான சொல்லச்சொல்லத்
துருக்காகச் சொல்லியே பின்புதானும்
துணையாகச் சத்துதனைச் சேரென்றாரே. (106)

சத்துதனைச் சேர்த்தரைத்து வில்லைகட்டிச்
சரியாகப் புடம்போட்டு யெடுத்துக்கையில்
வைத்துநபி மார்களைத்தான் வணங்கிச்சென்று
வகையான சந்தானி சேரென்றார்கள்
முத்துமே சலாஞ்செய்தேன் பாவாயென்றேன்
முதன்மைபெற யெனுமிச்சம் பழக்கைதச்சொல்லி
இத்துக்கு ஆண்டவன்மே லாணையிட்டுச்
செய்யென்று மொழிசொன்னார் செய்கைதானே. (107)

தானென்று பின்னுமொரு செய்திகேட்டேன்
        தாட்டிகமாய்ப் பஞ்சமித்திரம் நூல்கள்பாட
கோனென்ற உத்தாவு பெற்றுக்கொண்டு
        குணமாகச் சேர்த்தரைதது்ப் புடத்தைப்போட
வானென்ற கரியாக யிருந்துதென்று
        வழியாக யில்லையென்று மயக்கங்கொண்டேன்
கானென்ற நபிமார்கள் பயப்படாதே
        கருணைபெறக் குகையிட்டு உருக்கென்றாரே. (108)

உருக்கிடவே செம்பாச்சு உறுதியாச்சு
        உண்மைமதி யெட்டுக்கு ரெண்டுசெம்பு
பெருக்கவே கொடுத்திருக்க மாததுஆறு
        பெருமைபெறக் கண்டுமன மகிழ்ந்தேன்பாவா
குருக்களவர் சொன்னதுதா னிந்தமட்டம்
        சுகமாக யிடைக்கிடைதான் தங்கம்வைத்து
சுருக்கவே உருக்கென்று நபிமார்சொல்ல
        சுகமாக உருக்கிவித்தேன் கொள்கைதானே. (109)

தானேதான் உருக்கியே கடையில்வித்து
        சகலசித்து மாடியே சீவனத்தை
ஆனேகான் பண்ணியே சிறிதுகாலம்
        அடைவாக நபிமாரைக் காத்திருந்தேன்
வானேநான் மனதிரங்கச் செந்தூரத்தை
        வகையாகக் கேட்டுமே சொனனார்பாவா
பானேமுன் னயமெடுத்த செம்பினோடே
        பதிவாகத் தங்கத்தைச் சேரென்றாரே. (110)

சேரென்றா ரிடைசேர்த்து உருக்கச்சொன்னார்
        சிற்பெரிய நபிமார்க ளாடுமாட்டு
வாரென்றார் நாத்தமுடன் வீரஞ்சேர்த்து
        வகையாக அரைத்துமே தகட்டிற்பூசி
நானென்று நொருங்கமட்டும் புடத்தைப்போட்டு
        நலமாகக் கொடியோனைச் சேர்க்கச்சொல்லிக்
கூரென்று புடம்போட்டு யெடுத்துவாங்கிக்
        குணமாக வெள்ளிநனிற் கொடுத்தார்தானே. (111)

கொடுத்திடவே மதிபழுத்த நேர்மைகண்டேன்
குணம்பெரிய நபிமாரைத் தொழுதிறைஞ்சி
அடுத்திடவே லாயிலா யில்லல்லாகூ
ஆண்மையுள்ள மகமதுவைத் தொழுதயானும்
தடுத்தொன்றும் பேசாம லங்கிருந்து
நயவுபெற்று உத்தரவு தானும்பெற்று
கடுத்திட்ட சொல்விட்டுக் குணமும்நல்ல
காரணத்தின் செயலறிந்து கனிந்தேன்யானே. (112)

கனிந்துமே அங்கிருந்து சிலதுகாலம்
கனகமுள்ள ரசங்கட்டக் கேட்டுக்கொண்டேன்
பணிந்துமே துரிசுநீர் பண்ணித்தந்து
பதிவான குளிகைகட்டிப் பாகமாகக்
குனிந்துமே கைகொடுத்து யாகூயாகூ
குணமாக அனுப்பியே கொண்டேன்பாலா
தணிந்துமே வெகுதேசஞ் சுத்திப்பார்த்தேன்
சாஸ்திரங்கள் பாடினேன் தன்மைதானே. (113)

தன்மையா யிந்தநூல் சொன்னபாகம்
தப்பினால் கடைகெட்ட யாகோப்பென்று
உண்மையாய் சொல்லுவா ரென்றுசொன்னேன்
உறுதியாய்க் கைபாகந் தப்பிச்சென்றால்
வண்மையாய் மூன்றுதிர மருவிப்பாரு
வடிவான பாகமெல்லாம் வெளியாய்ப்போகும்
பெண்மையாய் வாதம்வரும் செம்புமாகும்
பேதையர்போல் திரியாதே பேணிப்பாரே. (114)

பேணியே மனதுதனை ஒக்கப்பண்ணிப்
பிரட்டைவிட்டு நூல்பார்த்து வினையங்கண்டு
ஊணியே ஒருவேளை யென்னவென்றால்
உத்துமே கத்தெடுத்து உறுதிபார்த்து
வீணிலே திரியாமல் செம்பெடுத்து
விதமான மதிதனிலே பாச்சவேமம்
காணிலே யிடைசமனாய்ச் சேர்த்துஊது
கருவாக லாபம்வருங் கண்டுகொள்ளே. (115)

கண்டுகொள்ளு யிதைவிட்டு ரெம்பமாத்து
கனிவாக வேணுமென்றால் ஒன்றுமில்லை
பண்டுமே பழங்கதைகள் பேசவேண்டாம்
பாருலகி லிருக்கமட்டு மட்டஞ்செய்து
தொண்டுபட யிதைவிட்டு பக்கிரிவேசம்
துரிதமாய்க் கொண்டாக்கால் மாத்துரெம்ப
முண்டுபடச் செய்தாக்கால் அல்லாவுக்கு
முக்கியமாய் பொறுக்குமென்று தான்சொன்னாரே. (116)

சொன்னதொரு அயச்செம்பு யில்லாப்போனால்
சுருதிதனில் மட்டமது புடமிறங்கா
நன்னயமாய் அயச்செம்பு யேதென்றாக்கால்
நலமான துருசு அயஞ் சேந்தாலாகும்
கன்னல்போல் செம்பாகும் யில்லாப்போனால்
கருத்தங்காச் செம்பில்லை கண்டுகொள்ளு
இன்னிலத்தில் உங்களுக்குச் சொல்லிப்போட்டேன்
இருந்துரைத்தேன் யாகோபு யிதமதாமே. (117)

இதமாகத் தெரியாத வாதிதானும்
இன்பமாய் அயச்செம்பு யெடுப்பேனென்று
அதமாகச் சுத்தஅர பொடியைராவி
அடைவான மூலிகையி லுருக்குவார்கள்
பதமாகச் செம்புவர வில்லையென்பார்
பாகமில்லை யென்றுசொல்லி அலைவார்மூடர்
விதமாகச் சொல்லியே புலம்புவார்கள்
வேதாந்த யாகோபு விளம்பினாரே. (118)

விளம்பினேம் செம்புவர மார்க்கங்கேளு
விருப்பமாய் அயத்தினுடன் துருசுசேரு
தளம்பவே துருசினுடன் கெந்திசேரு
தாட்டிகமாய்க் கெந்தியுடன் வீரஞ்சேரு
அளம்பவே சுடர்க்கொடியோன் தன்னைச்சேரு
அப்பவே செம்புசத்து யிருக்குப்பாரு
வுளம்பவே வெங்காரந் தன்னைச்சேர்க்க
உருகிடவே செம்பாகும் உலகத்தோரே. (119)

உலகத்தில் செம்பான பிறகுநீயும்
உற்றுயெடு மதிபழுத்து உறவுமாகும்
பலகத்துத் திரியாதே தங்கஞ்சேரு
பதிவான பொன்னாகும் பாரிலோர்க்கு
நிலைபதக்கம் ஞானம்வரும் செல்வமாகும்
நீடூழி காலமெல்லாம் உண்ணலாகும்
அலையாதே பரபரப்பா யாகோப்சொன்னர்
அறிந்திட்டால் யெல்லாமுஞ் சித்தியாகும். (120)

அயச்செம்பு.

சித்தியா யின்னமொரு அயத்தின்செம்பு
தீர்க்கமாய்ச் சொல்லுகிறேம் உற்றுக்கேளு
நத்தியாம் அரபொடிதான் ராவிநீயும்
நலமாகப் பலம்பத்துப் பீங்கானிட்டு
மூத்திபெறப் பழச்சாறு மிதக்கவிட்டு
முனிவாக நாள்மூன்று ஊரவைத்துச்
சத்தியமா யலம்பியதைக் காயவைத்துச்
சாரித்து யின்னமொரு தகமைகேளோ. (121)

தகமையாந் துரிசதுவும் பலமும்பத்து
தாட்டிகமாய்ப் பொடியாக்கிச் சட்டியிட்டு
உகமையா யெரித்திடவே வெள்ளைபோலாம்
உற்றுயெடு பலமஞ்சு கல்வத்திட்டு
பகமையாய் அரபொடியும் பலமும்ஒன்று
பக்குவமாய் நாறும்பூ பலமுமூன்று
வகமையாய் பழச்சாறு விட்டுநீயும்
வடிவாக நாள்மூன்று அரைத்திடாயே. (122)

அரைத்துமே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
அடைவாக மேற்கவசம் அறியக்கேளு
தரைத்துமே சுண்ணும்பு உப்பும்நேரே
தாட்டிகமாய் மேனியென்ற சாறுவிட்டு
வரைத்துமே புடம்போட்டு யெடுத்துநீயும்
வடிவாக மேனியென்ற சாறுவிட்டுப்
பரைத்துமே அரைத்துவில்லை மேலேகட்டிப்
பதிவாக மண்சிலை வலுவாய்ச்செய்யே. (123)

வலுவாகச் செய்துமே புடமுமிட்டு
வாடியே போகாம லெடுத்துப்பாரு
பலுக்வே கரிபோலே தூளுமாகும்
பாத்திட்டுக் கொஞ்சம்போற் கரியிலிட்டுக்
கலுகவே உருக்கிப்பார் சத்துமாகும்
கனமான பாகமிது கண்டுகொள்ளு
சலுவாகச் செம்புபோலக் கண்டால்நீயும்
சரியாக முன்போலே பூவைச்சேரே. (124)

சேர்த்துமே அரைத்துநீ புடமுமிட்டுச்
சிரப்பாக உருக்கிப்பார் சத்துயாகும்
பார்த்துமே பக்குவமாய்க் கல்வத்திட்டுப்
பதிவான பாடணத்தான் பாதிசேர்த்துக்
காத்துமே செவ்வல்லி தன்னுலாட்டிக்
கனிந்துமே வில்லைக்கட்டிக் காயப்போடு
நாத்துமே புதுவோட்டி விட்டுநீயும்
நலமாகப் புடம்போட்டு யெடுத்துக்கொள்ளே. (125)

எடுத்துமே பிரம்பாக வைத்துக்கொண்டு
ஏழைமதி போகாதே பின்னங்கேளு
அடுத்துமே கிருவணமும் பலமும்பத்து
அடைவான ஆட்டமுரி தனிலேசேளு
தடுத்துமே பதினெருக்கா லுருக்கிச்சாய்க்கத்
தவளம்போல் நிறமாகும் யெடுத்துநீயும்
படுத்துமே கல்வமிட்டு நைபத்தட்டிப்
பதிவான சந்தானி பாதிசேரே. (126)

சேத்துமே அன்னத்தை முரிக்கக்கேளு
செயமான திரிபலாதி முதல்சரக்குப்
பாத்துமே பொடியாக்கிச் சோத்திலிட்டால்
பதிதாக நீராகும் நீரைத்தானே
காத்துமே அதில்விட்டுக் கரையஆட்டிக்
கணக்காக வில்லைகட்டிக் கதிரில்வைத்து
நாத்துமே பெருப்புடமாய்ப் போட்டெடுத்து
நலமாகக் கல்வமிட்டு நாட்டங்கேளே. (127)

காட்டமென்ன சந்தானி பின்புதானும்
நலமாகப் பாதியிடு அன்னநீரால்
வாட்டுபட அரைச்சாமம் நாலுமாகும்
வளமான வில்லைகட்டிக் கதிரில்வைத்துக்
கூட்டுமென்ன ஒட்டிவிட்டுப் புடமுமிட்டால்
குணமான மஞ்சள்போ லிருக்குங்கண்டீர்
தேட்டுவரு மிப்படிக்கித் திரமும் அஞ்சு
செயமாக யிட்டபின்பு சொல்லக்கேளே. (128)

சொல்லவே குருவாச்சு செயமதாகும்
துடிவான குருவெடுத்து வைத்துக்கொண்டு
வெல்லவே புடம்போட்ட அபத்தின்சத்தில்
விதமாக எட்டிலொன்று சொல்லக்கேளு
நல்லவே கிராவணமும் மெடுத்துப்போடு
நலமாகக் கல்வமிட்டு நாட்டங்கேளு
வல்லமையாய்ப் பழச்சாறு விட்டரைத்து
வடிவாக வில்லைகட்டிக் கதிரில்வையே. (129)

கதிரில்வைத்து அகலிலிட்டு மண்ணுசெய்து
கருதியே புடம்போட்டு மெடுத்துக்கல்வம்
பதிவாக விட்டுமே பழச்சார்விட்டுப்
பக்குவமா யரைத்துவில்லைக் கதிரில்வைத்து
நிதிபெறவே புடமிட்டுச் சொல்லக்கேளு
நிலவரயாய்ப் புதக்குகையி லிட்டுநீயும்
விதியாக மூன்பாலே உருக்கச்செம்பாம்
வெற்றிபெற யாகோபு விளம்பினரே. (130)

விளம்பவே செம்பாகும் செம்புநேத்தி
விதமாக யிச்செம்பில் கவரோகோடித்
தளம்பவே மதியேழில் மூன்றுசெம்பு
தாக்கிட்டு உருக்கிப்பார் வெடிப்பாய்க்காணும்
அளம்பவே அந்தயிடை தங்கத்தாயை
அடைவாக உருக்கியே ஊதிப்போடு
துளம்பவே பத்தரைக்குக் குறையாதப்பா
துடியாக யாகோபு சொன்னவாறே. (131)

சொன்னதொரு யிதைவிற்றுச் செலவுசெய்து
துடியாக யின்னமொரு செய்கைகேளு
ஒன்னயமாய் முன்னெடுத்த செம்புநேரே
நலமாக யேபத்தை உருக்கிக்கொண்டு
கன்னல்போ லூதியதைத் தகடாய்த்தட்டிக்
கணக்காக நாறும்பூ சிகப்பிகூட்டிப்
பன்னகமாய்ப் பழச்சாற்றி லரைநால்சாமம்
பக்குவமா யரைத்துமுன் தகட்டிற்பூசே. (132)

பூசியே உலரவைத்துப் புடத்தைப்போடு
போக்கோடே யெடுத்துமே பின்புகேளு
தாசியே பின்பொருக்கால் பூசிப்பூசித்
தாட்டிகமாய்ப் புடம்போடு நொறுங்கும்நன்றாய்
வாசியே நொறுங்கினபின் கல்வத்திட்டு
வடிவாக அரைத்துவில்லைக் கதிரில்வைத்துப்
பாசியே ஓட்டிலிட்டுப் புடத்தைப்போடப்
பரிவாகக் கரிபோலே தூளுமாமே. (133)

தூளுமா மடனைத்தான் பாதிசேர்த்துத்
துடியான பூச்சாறு விட்டுஆட்டிப்
பாளுமே போகாமல் நாலுசாமம்
பக்குவமா யரைத்துவில்லை கதிரில்வைத்துக்
காளுமே புது அகலி லிட்டுமுன்போல்
கடிதான புடமிட்டுச் சொல்லக்கேளு
நாளுமே யெடுகல்வ மிட்டுநீயும்
நலமான சந்தானி சேரக்கேளே. (134)

சேர்க்கவே யெட்டிலொன்று சேததுநீயும்
செவ்வல்லிப் பூச்சாறால் சாமமாட்டிப்
பார்க்கவே வில்லைகட்டிக கதிரில்வைத்துப்
பக்குவமாய்ப் புடம்போடு பாரிலோரே
காற்கவே சிவப்பாகும் யெடுத்துநீயும்
கருணைபெற அல்லாவைத் துதித்துப்போற்றி
ஏற்கவே வெள்ளிபதத்தில் ரெண்டுசேரு
இதமாகத் தங்கமாம் யின்பமாமே. (135)

இன்பமாந் தங்கத்தைக் கண்டபோதே
யிதமாகக் கெருவமில் லாதேதானில்லு
அன்பாகக் கெருவம்வந்தாற் சொல்லக்கேளு
அடைவான அரசர்கள்தான் உன்னைத்தானும்
வன்பாகக் கூட்டிப்போய்ச் சொல்லச்சொல்வார்
வடிவாகச் சொல்லாட்டால் அரசர்தானும்
முன்பாக உன்னைத்தான் வெட்டுவார்கள்
முடிவாக மனதடங்கி நின்றிடாயே. (136)

நின்றிட்டாற் பலனுகுஞ் சித்தியுண்டு
நிலைதப்பி னுன்னையவர் சினனஞ்செய்வார்
கன்றிட்டுப் பால்கரந்தாப் போலேவாதக்
கணக்கறிந்து செம்புதனைக் கருதிப்பாரு
நன்றிட்டு லாபம்வரும் அநேகங்கூடும்
நாதாந்த நபிமார்கள் சொன்னநேர்மை
அன்றிட்டு அலுக்காமற் செய்துகொள்ள
அடைவான சித்தியெல்லா மாகுந்தானே. (137)

செம்புச்சத்து.

ஆதுமேயின்ன மொருசெம்பு சொல்வேன்
அன்பாக நபிமார்கள் சொன்னநேர்மை
பாகுபெற நேர்வாளச் செம்புவாங்கிப்
பதியவே பலம்பத்துக் குகையிலிட்டுத்
தாகுபெற நல்லாக உருக்கிக்கொண்டு
தருகெந் தகத்தைபிடைக் கிடையுமீய்ந்து
நாகுபெறச் சத்தாக மட்டுந்தாக்கு
நலமான சத்தாளு லெடுத்துக்கொள்ளே. (138)

எடுத்துமே வெங்கலம்போற் சத்துதன்னை
யிதமாகக் கல்வமிட்டுப் பின்புகேளு
அடுத்துமே சத்துக்கு வீரங்காலாம்
அதையிட்டு அரைக்கயிலே மஞ்சளாகும்
தொடுத்துமே கொடியோனைப் பாதியிட்டுத்
துணையாகச் செவ்வல்லிப் பூச்சாறிட்டுப்
படுத்துஅரை வில்லைகட்டிக் கதிரில்வைத்துப்
பதமாகக் குக்குடத்தின் புடத்தைப்போடே. (139)

புடம்போட்டு யெடுத்துமே புரம்பாய்வைத்துப்
போக்கான சத்துவது பலமுமஞ்சு
அடம்படவே பிங்கானி விட்டுக்கேளு
அடைவான யெனுமிச்சம் பழச்சாற்விட்டு
நடம்போடு மூன்றுநா ளூறவைத்து
நலமாகக் கழுவியே உலரப்போட்டு
வடம்போடு முன்போட்ட வில்லைக்குத்தான்
வடிவாக காலிலொன்று சேர்த்துக்கொள்ளே. (140)

சேத்துமே பழச்சாறு விட்டுஆட்டிச்
செம்மையாய் வட்டதுபோல் வில்லைபண்ணிக்
காத்துமே நபிமாரைத் தொழுதுபோற்றிக்
கணக்கறிந்து புடமிட்டு யெடுத்துநீயும்
பாத்துமே சந்தானி பாதிசேர்த்துப்
பதிவாகப் பழச்சாறு விட்டரைத்து
வாத்துமே வில்லைகட்டிப் புடமுமிட்டு
வகையாகக் குகையிலிட்டு உருக்கிடாயே. (141)

உருக்கிடவே ரவியாகும் யிந்தச்செம்பை
உண்மையாய் வெள்ளியதை ஊதிப்போட்டு
நருக்கிடவே யெட்டுக்கு ரெண்டுசேரு
நலமாக மாததாறு காணும்நல்லா
பருக்கிடவே தங்கமதை யிடையேசேர்த்துப்
பார்த்திடவே மாத்தெட்டு மாகும்நல்லா
வருக்கிடவே யிதைவித்துச் செலவுசெய்து
வடிவாகச் செந்தூர வண்மைகேளே. (142)

வண்மையாய்ச் சொன்னமுறை போலேசெம்பு
வடிவாக யெடுத்துமே வைததுநீயும்
உண்மையாய்த் தங்கமதை யிடையேசர்த்து
உறுதிபெறத் தகடாக்கிப் பூசக்கேளு
தண்மையுள்ள கெந்தியுடன சிசுரமகூட்டித்
தாக்கியரை பூச்சாறு தண்மையாக
வண்மையா யிருசாமம் ஆட்டிநீயும்
வடிவாகத் தகட்டின்மேல்க் கவசம்போடே (143)

போட்டுமே நொருங்கமட்டும் புடமுமிட்டுப்
பொறியாறி யெடுத்துமே கல்வமிட்டு
நாட்டுமே சுடரைத்தான் சேர்த்தரைத்து
நலமாகப் புடம்போட்டு வெங்காரத்தை
எட்டிலுள்ள படிசேரு அரைத்துவில்லை
யினமாகக் கதிரில்வைத்து ஓட்டிவிட்டு
பாட்டுமே யெடுத்துப்பார் சிவந்துநிற்கும்
பாத்திட்டு யெடுத்துமே பகரக்கேளே. (144)

பகரவே வெள்ளிபத்தில் ரெண்டுமீய
பதிவான தங்கமாம் பாரிலோர்க்கு
நகரவே ஒருவருடன் சொல்லிடாதே
நபிமார்கள் சாபமிடு வார்களப்பா
தகரவே கண்டவுடன் கெற்சிக்காதே
தருமான படியிருந்தால் நன்மையாகும்
உகரவே திரியாதே உழண்டுபாரு
உத்துணர்ந்து யாகோபு உரைசெய்தேனே. (145)

உரைசெய்தேன் வடமொழியைப் பார்த்துநானும்
உண்மையாய் நபிமாரைக் கேட்டுக்கேட்டு
வரைசெய்தேன் வீணருடன் பேசவேண்டாம்
வடிவான சரக்கதனை அலைந்துபாரு
குறையாக வெண்ணுதே சரக்கைக்கண்டு
குத்தமற உன்னினைவில் குருரம்வைத்துப்
பரையாக உலகத்தில் பத்தியாகப்
பண்பாக யிருந்திடவே முத்தியாமே. (146)

முத்திபா யாகவென்றால் கெந்திதன்னை
முழுதும்உழை பாகம்வரும் முதலுமாகும்
சித்திபா யாகவென்றால் அயத்தைப்பாரு
சீர்தூக்கப் பலனுகும் சிறப்புமாகும்
புத்திபா யாகவென்றால் நூலைப்பாரு
புதுமைபெறச் சரக்கெல்லாங் கண்டுதேரு
சத்தியமாய் நபிமாரை அடுத்துக்கேளு
சாத்தியாய்ப் பாகமதைச் சல்திபாரே: (147)

சல்தியாய் நபிமாரைக் காணவென்றால்
சாஸ்திரத்திற் சொன்னபடி சரக்கைவைத்து
வல்தியாய்ச் செம்பெடுத்து வெள்ளிதன்னில்
வடிவாகக் குடுத்தபின்பு தங்கஞ்சேர்த்து
உல்தியாய்ச் செட்டிகையில் வித்துலாபம்
உண்மையதைச் செலவுக்கு வைத்துநீயும்
நல்தியாய்ச் சூதத்தைக் கட்டித்திரு
நாதாந்த யாகோபு நலஞ்சொன்னாரே. (148)

நலமாக யிருக்கவென்றால் பொன்னைக்கண்டு
நாட்டிலே சொல்லாதே மவுனமாக
பிலனாக யிருந்துமே யாவருக்கும்
பேசாமல் யாபாரம் பண்ணிக்கொள்ளு
அலனாக அலையாதே அல்லாதன்னை
அடைவாக முப்பொழுதும் வணங்கிப்பின்பு
கலனாக வேதத்தைப் படித்துத்தேறு
கருணைபெற யாகோபு கண்டார்தானே. (149)

கண்டதொரு உலகத்து வாதியெல்லாம்
கனிவாக ஆண்டவரைத் தொழுதாரென்று
பண்டுபோ லுனைவணங்கு வார்களையா
பதிவாக அவர்களுடன் பேசிடாதே
தொண்டுபடு வார்கள்நீ மவுனமாகத்
துடியாகப் பேசாம லிருந்துநீயும்
கொண்டதுபோ லவர்களையு மெச்சிக்கொள்ளு
குணமாக யாகோபு குறித்தார்தானே. (150)

குறித்தார்கள் உலகத்தில் லிருக்கும்பேர்கள்
கொடிதாக ஒருவனுக்குப் பணமிருந்தால்
பறித்துமே அவர்களையே யெளியோராக்கிப்
பதிக்கவே நெஞ்செறிப்பு மிகவுங்கொள்வார்
நறித்துமே உலகத்தில் யெல்லோருக்கும்
நலமாக ஆண்டவர்மே லிச்சையாகும்
கறித்துமே ஆண்டவனைத் தொழுகும்போது
கண்டறிவா ருலகத்தில் கருமிதானே. (151)

கர்மிக்கு மனதுபோல் நடந்துகொள்ளு
கருணைபெற அவரவர்க்குத் தருமானத்தை
வர்மிக்கும் படிநடப்ப திருக்கவேண்டாம்
வடிவாகச் சுடுவாதி தன்னைக்கண்டு
பர்மிக்கப் பேசாதே அவன்பேச்சாகப்
பாரிலே வாதத்தில் வெகுநாட்பட்டேன்
தர்மமா யுன்னிடத்தி லெனக்குஒன்று
தடையறவே கேட்டாக்கால் தான்போவானே. (152)

போகுவான் வெகுநாளாய்ச் சுட்டுக்கெட்ட
புலையனுக்கு ஒருபோதுஞ் சொல்லவேண்டாம்
போகுவான் ஆண்டவன்தன் பொக்கிஷத்தை
ஒருவரா லெடுக்கவே கூடுமோதான்
தாகுபெறக் குடுத்துவைத்தால் தோணும்தோணும்
தடையறவே நூல்பார்த்தால் துலங்கும்பாரு
வாகுமே யெல்லாமுஞ் சித்தியாகும்
வகையாக லோகத்தின் வழிசொன்னாரே. (153)

அயஉருக்கினம்.

லோகத்தி னரபொடியும் பலமும்பத்து
உறுதிபெறப் பழச்சாற்றில் திரிநாளூற
ஆகமாய்ப் பாணிவிட்டு அலம்பித்தீரு
அடைவான ரவிதனிலே காயவைத்துப்
பாகமாய்ப் பலம்பத்துக் கல்வத்திட்டுப்
பதிலான சந்தானி பாதிசேர்த்துத்
தாகமாய்ப் பழச்சாறு விட்டுஆட்டித்
தாட்டிகமாய் வில்லைகட்டிக் கதிரில்வையே. (154)

கதிரில்வைத்து ஓட்டிவிட்டுப் புடமுங்காடை
கணக்காகப் புடமிட்டு யெடுத்துக்கல்வம்
பதியாக விட்டுமே பின்புகேளு
பக்குவமாய்ச் சந்தானி முன்போற்செத்து
சதியாகப் பழச்சாறு விட்டரைத்துச்
சாமமது சென்றபின்பு வில்லைகட்டி
விதியாக அகலிவிட்டு முன்போற்கேளு
விதிபெறவே புடமிட்டு யெடுத்திடாயே. (155)

எடுத்திடவே யிப்படிக்கிப் புடமுமஞ்சு
யிதமாகப் புடமெல்லாஞ் சந்தானிசேர்த்து
அடுத்திடவே புடம்போட்டு யெடுத்தபின்பு
அடைவாக வில்லைதனிற் கொஞ்சமிட்டு
விடுத்திடவே கரியில்வைத்து உருக்கிப்பாரு
விருப்பமாய் லோகமது கரைந்துநல்லா
படுத்திடவே உருக்கினல் பாகமாகும்
பதிவாக உருகாத போனற்கேளே. (156)

போனலே பழையபடி சந்தானிசேர்த்துப்
போகவே அரைத்துநீ புடத்தைப்போட
வானலே உருக்கிப்பார் கரியில்வைத்து
வளமாகக் கறுப்பாகக் கரியில்நின்று
ஆனலே ஆடினல் பாகம்நேத்தி
அப்படிக்கிப் பாகமதை அறிந்துசெய்து
தானலே குருவாக வைத்துக்கொண்டு
தாட்டிகமாய்ச் செம்பெல்லா மெடுத்துக்கொள்ளே. ()

எடுத்துமே யிக்குருதான் யெதுக்கொப்பென்று
யிதமாகச் சொல்லுகிறே னுற்றுக்கேளு
அடுத்துமே ஆண்டவற்கு ஒப்பாம்பாரு
ஆண்டவரு மனிதர்களைப் படைப்பாரப்பா
படுத்துமே யிதுபோலச் செத்தசெம்பைப்
பதிவாக உயிர்கொடுக்கும் பகரப்போகா
நடுத்துமேயிக் குருவா லெல்லாந்தங்கம்
நாதாந்த யாகோபு நலஞ்சொன்னரே. (158)

திருசுச்செம்பு.

நலமாகச் சொல்லுகிறேன் துருசிலுள்ள
நாதாந்தச் செம்புதா னிறக்குநேர்மை
பிலனகத் துருசுதான் பலமும்பத்து
பின்புதான் நாறும்பூ பலமும்யேழு
தலனகச் சூடனது பலமுமஞ்சு
தாட்டிகமாய் வீரமது பலமுரெண்டு
கலனகை யிதுவெல்லாங் கல்வத்திட்டுக்
கணக்காக எலுமிச்சம் பழச்சாருட்டே. (159)

ஆட்டியே காலுநாட் சென்றபின்பு
அதைக்கதிரில் வைத்துநல்லாக் காயவைத்து
மூட்டியே சுண்ணும்பு உப்பும்நேரே
முடிவான மேனியென்ற சாற்ருலாட்டி
வாட்டியே புடமிட்டுப் பின்புகேளு
வடிவாக மேனிச்சாற் றன்ணலாட்டி
காட்டியே வில்லைக்கிக் கவசங்கட்டிக்
கனமாக அதின்மேலே சீலைசெய்யே. (160)

சீலைசெய்து உடனேதான் புடமுந்தீர்ந்து
சிறப்பாக வெடுத்து மேற்கவசந்தன்னை
மாலையாய்ப் பிரித்துப்பார் நீலனைக்கும்
மயமாகக் கொஞ்சமெடு கரியில்வைத்து
நாலையா யுருக்கிப்பார் நீலம்போல
நல்லாக ஒடினல் நிலைத்தவேலை
காலையா யோடாமற் செம்பதானல்
கனமாகப் பின்புமே சரக்கைச்சேரே. (161)

சரக்குமே செத்திட்டு அரைத்துக்கொண்டு
சல்லியெடுத் துக்கல்வங் தன்னிலிட்டுப்
பாக்கவே முன்செய்த குருவும்பாதி
பாத்திட்டு பெலுமிச்சம் பழச்சார்விட்டு
வாக்கமாய் நேகஅரை சாமம்நாலு
வடிவில்லை கட்டிபெரும் புடமாய்ப்போடு
தாக்கவே யெல்லாமுங் குருவுமாகும்
தாட்டிகமா யாகோபு சொன்னவாறே. (162)

சொன்னதொரு புடம்போட்ட வில்லைதன்னைச்
சுருதிபெற நல்லகுகை தன்னிலிட்டு
நன்னயமா யுருக்கிடவே செம்புமாகும்
நாதாக்க ளாடுகிற செம்புமாச்சு
பின்னமில்லாச் செம்புநிறஞ் சொல்லக்கேளு
பேசரிய கதிரவன்போற் காணுங்காணும்
தன்னிகரில் விலைபெற்ற செம்புதன்னைத்
தக்கமிட்டு யெடுத்துமே வைத்துக்கொள்ளே. (163)

கொள்ளவே யித்திரத்திற் சாய்க்கக்கேளு
குடிலமா யிலுப்பைப்பூ வருந்தேனுமாகும்
நள்ளவே வாழையுட கிழங்குச்சாறு
நலமான நல்லெண்ணெ நெய்யுமாகும்
வெள்ளம்போல் சொல்லிவந்தே னின்னமுந்தான்
வெகுவாகச் சொல்லுகிறேன் மெத்தமெத்த
கள்ளமாய்க் கட்டுப்பால் சதிரக்கள்ளி
கனிவான பாலாகுந் தேங்காய்ப்பாலே. (164)

தேங்காயின் பாலுடனே கூடச்சேர்த்துச்
சிறப்பாக வகைவகைக்கிப் படி அரைக்கால்
பங்காக யிதுவெல்லாங் குழப்பிக்கொண்டு
பதியவே உருக்கிச்சா யெட்டியோகும்
நீங்கியே கர்மிசங்கள் கழன்றுபோகும்
நீலக்குமே வெள்ளியது தங்கமாகும்
வாங்கியே பாத்திடவே தங்கச்செம்பு
வடிவான செம்பெல்லாஞ் செய்திடாயே. (165)

செய்திடவே வெள்ளிதனில் வங்கங்கூட்டித்
திடமாக ஊதியபின் னெடுத்துநல்லா
வைதிடவே வெள்ளியது யேழுமாகும்
வடிவான செம்பதுவு மூன்றுசேர்த்துக்
கைதிடவே தங்கமது யிடையேசேரு
கனிவான தங்கமாய் வித்துக்கொள்ளு
எய்திடவே சீவனத்தைப் பண்ணிக்கொண்டு
யிதமான செந்தூரஞ் செய்துகொள்ளே. (166)

கொள்ளவே செந்தூரஞ் செய்யக்கேளு
குறிப்பான செம்பதுவும் பலமுமொன்று
தள்ளவே தங்கமது ஒன்றுகூட்டித்
தனித்துமே உருக்கியே தகடாய்த்தட்டி
நள்ளவே கெந்தகமும் வீரமிட்டு
நலமாகப் பூச்சாறு விட்டரைத்துத்
துள்ளவே வில்லைகட்டிக் கதிரில்வைத்துத்
துடியாகப் புடமிட்டு யெடுத்துக்கொள்ளே. (167)

எடுத்துமே கொடியோனைப் பாதிசேர்த்து
　　இதமாக முன்பூவின் சாறுவார்த்து
அடுத்துமே வில்லைகட்டிக் காயப்போடு
　　அதிகமா யோட்டிலிட்டுப் புடத்தைப்போடு
கடுத்துமே சிவந்துவிடும் முருக்கமபூப்போல்
　　கனமாக யிருந்திடுமே கண்டுகொள்ளு
தொடுத்துமே வெள்ளிக்கி யிருபத்தொன்று
　　தோய்க்திடவே தங்கமாந் துய்ந்துபாரே. (168)

துய்ந்துபார் வெகுநூலை ஆராய்ந்தல்லோ
　　சோதித்தாற் பலனுசுந் தோய்ந்துபாரு
பைந்துபா ரின்னூலைப் பார்த்துத்தேறப்
　　பதிவான வாதம்வரும் சத்துமாகும்
நைந்துபார் செம்பெடுத்து மதியிற்காக்க
　　நலமான தங்கமாம் நாட்டுளோர்க்கு
வைந்துமே சோதித்தா லெல்லாமாகும்
　　வழிகண்டு யாகோபு வரிசைசொன்னர். (169)

வரிசையாய்ச் சத்தெடுத்துக் காரங்கூட்டி
　　வழியோடே உருக்காட்டால் சொல்லக்கேளு
உரிசையாய் அயக்கசடு விலகமாட்டா
　　உற்றுமே சத்ததுவும் நிறமுமில்லை
பரிசையாய் வாட்டதுவு மிகுந்துபோனல்
　　பதப்படா வாறதுபோ லுதிர்ந்துபோகும்
நரிசையாய்ப் புடமதுவு மீறித்தானல்
　　நலமான செம்பெல்லாந் தீய்ந்துபோமே. (170)

தீஞ்சிட்டுச் செம்பதுவும் வருகப்பாரு
　　சித்தியில்லை உருக்கிறதோர் ஊத்துதப்பில்
பாஞ்சிட்டுச் சத்ததுவுந் தீஞ்சுபோகும்
　　பதிவான பலனில்லை உருச்சியில்லை
தாஞ்சியே சத்ததுவுங் கிட்டமாகும்
　　தடையறவே கிட்டத்தை ஊதிப்போடு
வாஞ்சுதே நூல்பொய்யாய்ப் போச்சுதென்பார்
　　வகையறியா வாதிக்குப் புத்திசொல்லே. (171)

புத்திநீ சொல்லிவிடு யின்னங்கேளு
பிரட்டல்ல திட்டமாய்ச் செய்துகொள்ளு
மத்திபமாய் மட்டம்போல் நிறமுங்கண்டால்
மதிபெருகப் பொன்னிடைதான் சேர்த்துஊது
நித்தியமாய்த் தகடடித்துப் புடம்போடாதே
நிலவரமாய் மட்டையிடை தங்கத்தாயைச்
சத்தியமாய்ச் சேர்த்துநீ உருக்கிநீயும்
சரியாகத் தகடுதட்டிச் சொல்லக்கேளே. (172)

சொல்லவே யீயமிட்டு ஊதவேண்டாம்
சுகமான யீயசெந் தூரம்போதும்
நல்லவெள் ளுத்துவர ஊதிப்பின்பு
நலமான தகடுதட்டிப் பின்புநீயும்
வெல்லவே வறுத்தஉப்பு நாலுபங்கு
விதமான புடமாவு மூன்றுமாகும்
கள்ளவே நேகரைத்துப் புளிச்சார்விட்டுக்
கனமான உண்டைபண்ணி கணக்குக்கேளே. (173)

கணக்காகத் தகட்டைத் தானுள்ளேவைத்துக்
கதிபெருகச் சேவலென்ற புடமுமிட்டுத்
தனக்காகப் பையயெடு தகட்டைமெள்ளத்
தட்டியேஒரு பீங்கான் தன்னிற்றானும்
வணக்கமாய்த் தகட்டைத்தா னொடித்துநீயும்
வளயாகக் கரியிட்டுக் காரங்கூட்டிப்
பணக்காக வைத்துமே உருக்கித்தட்டிப்
பண்பாக முன்போல உப்புவையே. (174)

வைத்துமே புடம்பதமாய்ப் போட்டெடுத்து
வகையான அதரெல்லாந் தட்டித்திரு
நைத்துமே பின்பொருக்காய் வைத்துப்போடு
நலமாகத் தங்கமது யிறங்குங்கல்லா
பைத்துமே யிதையெடுத்து நிருத்துப்பாரு
பதிவாக லாபம்வரும் பயப்படாதே
சித்துமே ஆடலாம் நபியார்போலே
சிறப்பாக யிருந்துமே வாழ்ந்திடாயே. (175)

வாழ்த்திடவே நபிமார்க ளாடுமாட்டை
வழிகண்டு யின்னூலில் வழியைச்சொன்னேன்
தாழ்ந்துமே போகாமல் பாகபாகத்
தடையறவே செய்திட்டு விற்றுக்கொள்ளு
ஆழ்ந்துமே செலவுசெய்து பள்ளிவாசல
அடுத்துமே தொழுதிட்டுத தீன்தீனென்று
வாழ்ந்துமே சொல்லியே செபங்கள்பண்ணு
வடிவான பாகோபு வகைசொன்னாரே. (176)

வகையென்ன சொல்லுகிறேன் உற்றுக்கேளு
வையகத்தி லொருசூது வண்மைபாரு
நகையான யிந்தநூல் முன்னூர்தன்னில்
நாடியே அங்கங்கே பாகமாகத்
துகையாகச் சொல்லிவிட்டேன் யெல்லாஞ்சேர்த்துச்
சுருதிபெற ஓத்தாக்கால் தோய்வுமாகும்
தகையாக யெல்லாமும் படித்தாற்றானும்
சாஸ்திரமும் நிசமாகுந் தன்மைபாரே. (177)

தண்மையாய் அயச்செம்பு யெடுத்துநீயும்
தடையறவே பலமொன்று நிறுத்திக்கொண்டு
உண்மையாய்த் தங்கமது பலமுமொன்று
உத்துமெள்ளக் குகைதனிலே உருக்கிக்கொண்டு
வண்மையாய் தகடாகத் தட்டிநீயும்
வகையாகச் சொல்லுகிற வழியைக்கேளு
பண்மையாய்க் கல்லுப்பு பலமும்நாலு
கடியசெங்கல் பலம்ரெண்டு கணக்குமாமே. (178)

கணக்காக மேனிச்சார் தன்னாலாட்டிக்
கருதியே கையினல் பிடித்துநீயும்
வணக்கமாய்த் தகட்டைத்தா னுள்ளேவைத்து
வடிவாகக் குழக்கட்டை போல்பிடித்துத்
துணக்கமாய்ப் பெரியபுடம் போட்டுத்திரு
துடியாக மெள்ளயெடு உண்டைதன்னைப்
பணக்கமாய் மெள்ளஉடை உப்புரெண்டாம்
பகையான அதரிருக்கும் யெடுத்துக்கொள்ளே. (179)

எடுத்துமே மீங்கானில் தட்டிநீயும்
ஏழைமதி போகாதே தகட்டைநீயும்
அடுத்துமே உருக்கிநீ தகடடித்து
அடைவாகப் பழையபடி உப்புக்குள்ளே
தடுத்துமே வைத்துநீ புடமுமிட்டுத்
தட்டியே அதரெடுத்துப் பின்புநீயும்
படுத்துமே யிப்படிக்கிச் செம்பெல்லாந்தான்
பதிவாக அதராக வெடுத்திடாயே. (180)

எடுத்திட்டுத் தங்கமதை உருக்கிக்கொள்ளு
இதமான அதரோடே கெந்திமுக்கால்
நடுத்துமே வீரமது காலுமிட்டு
நாடியே பழச்சாறு விட்டுஆட்டிக்
கடுத்துமே புடமிட்டு வெடுத்துப்பாரு
கனிவாகக் கரிபோலே தூளுமாகும்
படுத்துமே கொடியோனைப் பாதிசேர்த்துப்
பழச்சாறு விட்டரைத்து வில்லைகட்டே. (181)

கட்டியே புடமுமிட்டு யெடுத்துப்பாரு
கனமான குருவாகுங் கண்டுகொள்ளு
தட்டியே மதியெட்டில் ரெண்டுயீய
தன்மைபெறத் தங்கமாம் நல்லமார்க்கம்
வட்டிக்கிக் கொடுத்தபொருள் போலேயாகும்
வடிவான யிவ்வேதை வளமையாகும்
பட்டியே பொன்சேர்க்க வேண்டாம்பாவா
பதிவாக யாகோபு பாலித்தாரே. (182)

பாலித்தார் தங்கமில்லாக் களங்கமெங்கும்
பாதையிலே யெரிந்துவிடு பலனுமில்லை
கோலித்த யிரும்பில்லாச் சத்துவெல்லாம்
கொல்லையிலே தானெரிய மிகவும்நன்று
தாலித்த வங்கசெந் தூரமில்லா
தடையறவே செம்பாகா தறணியில்லை
கூலிக்கி அறுத்தவள்போற் சொன்னாலென்ன
கொடுமையுள்ள வாதிக்குள் கண்டபோரே. (183)

கண்டுமே சொன்னதொரு பாகம்விட்டு
கனிவாகச் செய்திடிலோ வர்ணமில்லை
பண்டுமே பழங்கதையி லென்னலாபம்
பதிவான கைபாக வரிசையாலே
துண்டுமே சத்திநுட மார்க்கமுண்டு
துடியான செம்புண்டு சூட்சமெத்த
வண்டுபோ லலையாதே நூலைப்பாரு
வடிவான பாகம்வரும் வணங்குவாயே. (184)

புடத்துஅதர்செம்பு.

வணங்குவா யேழையாம் வாதிக்கிததான்
வடிவான செம்பொன்று வழுத்தக்கேளு
தணங்கிய்ய காசுவிற்குஞ் செட்டியோடே
தாக்கியே அவனிடத்திற் சென்றுபுக்கிக்
கணங்காமல் பொன்னைத்தான் புடமுமிட்டுக்
கனிவாக அதரைத்தான் தள்ளுவார்கள்
பணமில்லா அதவரெடுத்து வாங்கிவந்து
பலமொன்று நிறுத்துமே கல்வத்திட்டே. (185)

இட்டுமே நாத்தமது மூக்காலிட்டு
யிதமான வெங்காரம் பலங்காலாகத்
தட்டுமே பழச்சாறு விட்டரைத்துத்
தகமைபெற மூன்றுநா ளரைத்துமைபோல்
கட்டுமே வில்லைகட்டிக் கதிரில்வைத்துக்
கணக்காகப் புடமிட்டு யெடுத்துக்கொள்ளு
பட்டுமே குருவாகும் குருவைவைத்துப்
பதிவாகத் தொழுதிறைஞ்சி யெடுத்துக்கொள்ளே. (186)

எடுத்துமே பார்த்தவுடன் கருப்புமாகும்
யிதமாகப் புதுக்குகையில் வைத்துருக்கு
அடுத்துமே சத்தாகும் சத்திற்பாதி
அடைவான சுடர்கொடியோன் சேர்த்துப்பூச்சார்
தடுத்துமே அரைத்துவில்லை காயவைத்துத்
தடையறவே புடமிட்டு யெடுத்துக்கொண்டு
படுத்துமே வெள்ளியெட்டு உருக்கிக்கொண்டு
பதிவாக ரெண்டுநீ பாச்சிடாயே, (187)

பாச்சிட்டு யெடுத்துப்பார் மாத்து அஞ்சு
பதிவாக வித்துமே உண்டுதேறு
காச்சிட்டு ஒருவருடன் சொல்லவேண்டாம்
கைகண்ட வித்தையிது கருதிப்பாரு
மாச்சிட்டு குருத்தேடி யலையவேண்டாம்
வடிவாக உண்டுடுத்தி திரிந்துநீயும்
வாச்சிட்டுப் பெருமையாய் நின்றுவாழு
வடிவாக யாகோபு வகைசொன்னுரே (188)

சொன்னதொரு யிப்பாகம் வெளியவாதி
சுகமாகப் பிழைக்கவே சொன்னேன்பாரு
நன்னயமா யொருவருக்குங் காட்டவேண்டாம்
நலமாகக் காட்டினுல் பொச்சுப்போகும்
கன்னல்போல் கடைசிதனில் சொல்லிப்போட்டேன்
கருத்துவைத்துச் சோதித்தால் கண்டமாத்து
இன்னிலத்தி லிருக்கமட்டுஞ் சொற்பமாக
யிதைவித்துச் செலவுசெய்து யிருந்திடாயே. (189)

இருந்திடவே மிசுக்கைக்குச் சொன்னவாதம்
இயல்பான தவப்பயனுல் கிட்டும்பாரு
வருந்திட்டுத் திரிந்தாலோ வாதமாகும்
வடிவாக வாதந்தான் வெளிதிலாகும்
கரந்திட்ட பால்போலே சொன்னநேர்மை
கருத்துவைத்துப் பாகமதைக் கண்டுகொள்ளு
பருந்துபோல் திரியாதே பாகம்பாரு
பதிவாக யாகோபு பலன்சொன்னுரே. (190)

கெந்திச்செம்பு.

பலனுக யின்னமொரு கெந்திச்செம்பு
பகரக்கேள் பகரிலது வேதையாகப்
பிலனுகத் துருசியது பலமும்பத்து
பேசரிய காத்தமது பலமும்பத்து
அலனுகப் பழச்சாறு விட்டுஆட்டி
அடைவாக வில்லைகட்டிக் கதிரில்வைத்துத்
தலனுக உப்புடனே சுண்ணும்பிட்டுத்
தாட்டிகமாய்க் கவசமிட்டுத் தன்மைகேளே. (191)

தண்மைகேள் புடமிட்டு யெடுத்துப்பாரு
தாட்டிகமாய்க் கரிபோலே தூளுமாகும்
வண்மையாய்க் குகையிலிட்டு உருக்கச்சத்து
வகையான வெங்காரம் யெட்டிலொன்று
உண்மையாய்க் குடுத்துருக்கி யெடுத்துக்கொண்டு
உறுதிபெற யிடைசாதி கொடியோன்போட்டு
நன்மையா யரைபாணி வில்லைகட்டி
நலமாக ஓட்டிவிட்டுப் புடத்தைப்போடே. (192)

புடம்போடச் செம்புதான் விலகிநிற்கும்
பொக்கான வெங்கார மிடையேசேர்த்து
தடமாக மேலூத்தா யுருக்கிக்கொண்டு
தக்கதோர் செம்பாகும் யீயம்மேலே
வடமாகக் கவசம்போற் கட்டிநிற்கும்
வடிவாகத் தட்டியே கல்வமிட்டு
அடமாகச் சுடர்க்கொடியோன பாதிசேர்த்து
அன்பாக அரைத்துவில்லை காயவையே. (193)

காயவைத்துப் புடம்போட்டுக் காரங்கூட்டிக்
கணக்காக உருக்கிடவே செம்புமாகும்
நாயமார் சொன்னபடி சொல்லக்கேளு
நலமாக யிச்செம்பு பலமுமொன்று
மாயவே தங்கமொன்று வெள்ளியொன்று
வடிவாக மூன்றுமே உருக்கிநீயும்
தாயகமாய்த் தட்டியே தகடாய்ப்பாரு
தன்மையா யாகோபு தாக்கினாரே: (194)

தாக்கினர் கல்லுப்புப் பலமும்பத்து
தடையறவே மேனியென்ற சாறுதன்னால்
வாக்கியே அரைத்துநீ புடமுமிட்டு
வகையாக நாலாகப் பிரித்துக்கொண்டு
ஆக்கியே ஒருபங்கு தகட்டின்மேலே
அறமாகக் கிழிட்டுப் புடத்தைப்போடு
போக்கியமா யுப்பைநீ தள்ளிப்பாரு
உறுதியா யதரெழும்பும் உண்மையாமே. (195)

உண்மையா யிப்படிக்கி அதரொடுத்து
    உறுதிபெறப் பலம்நிறுத்து வைத்துக்கொண்டு
தண்மையாய் நாத்தமது முக்காலாகும்
    தடையறவே வீரமது பலங்காவிட்டு
வண்மையா யரைத்துமே பூச்சாற்றாலே
    வடிவாக வில்லைகட்டிக் கதிரிலிட்டு
நன்மையா யகலில்வைத்துப் புடமுமிட்டு
    நலமாக வெடுத்துமே நாட்டங்கேளே. (196)

நாட்டமாய்க் குருவாகுங் குருவைத்தானும்
    நலமான வெள்ளியெட்டு உருக்கிநீயும்
காட்டமா யிக்குருவு ரெண்டுதாக்கு
    கனகமாங் தங்கமது கருத்துள்ளோர்க்கு
வாட்டமா யுப்புக்குங் காவிக்குத்தான்
    வடிவாக யிறங்குமது நல்லதாகும்
பாட்டிலே பாடினாற் போலேசெய்தால்
    பலனாரும் வாதியர்க்குப் பரிசுதானே. (197)

பரிசாக யிவ்வேதை நிசமதாகும்
    பதைபதைத்தது திரியாமற் பாகமாக
வரிசையாய்ச் செய்துமே முடிந்துக்கொண்டு
    வளமாக நபிமாரைப் போலேநீயும்
உரிசையா யிருந்துநீ தொழிலைப்பாரு
    உற்றுமே அல்லாவைத் தொழுதுநீயும்
முரிசையாய் முப்பொழுதுந் தொழுதுநீயும்
    முத்தியுண்டு நிசமாகு முடிவுதானே. (198)

முடிவான பாகத்தை விட்டுநீயும்
    முதல்போச்சு தென்றுமே முடிவுசொல்லித்
தடியாகத் திரியாதே அலைந்தலைந்து
    தாட்டிகமாய் நூலைத்தான் விரும்பிப்பாரு
வடிவாகச் சத்தைநீ சோதித்தேறு
    வணக்கமுறுஞ் செம்புதான் வெளியாய்ப்போகும்
குடிகார னாய்த்திரிந்து அலையவேண்டாம்
    கொள்ளையோ கொள்ளையிந்த வாதந்தானே. (199)

வாதந்தான் செய்வதுவும் அருமையல்ல
மகத்தான கைபாகம் வருகவேணும்
சூதந்தான் கட்டுவது அருமையல்ல
துடியான துருசதுவை நீத்தவேணும்
வேதந்தான் படிப்பதுவும் அருமையல்ல
வெத்திபெற நெஞ்சுதனி லிருத்தவேணும்
காதந்தான் நடப்பதுவும் அருமையல்ல
காலிருந்தால் நடக்கலாங் கண்டுகொள்ளே. (200)

கண்டுகொள்ளு சத்தைத்தான் கருணைகூர்ந்து
கனகமய மாகுமது கருதிப்பாரு
தொண்டுபடும் ஙபிமாரைத் தொழுதுபோற்று
துணையாகப் பத்தியே தொழுதுநீயும்
பண்டுமே முன்னிருந்த மனிதர்போலே
பக்குவமா யிருந்துநீ பாரிலோர்க்கு
மூண்டுகள்தான் பண்ணுமல் வித்துநீயும்
முளிவாகக் காலதனைத் தள்ளிடாயே. (201)

தள்ளிடவே சத்துவகை முன்னேபாரு
தாபித்து அதன்பின்னே செம்பெடுத்துத்
துள்ளியே திரியாதே மதியிற்தாக்குத்
துப்பரவாய்த் தங்கத்தை யிடைமேசேர்த்து
முள்ளியட விற்றுமே சிலவுசெய்து
முடியமட்டுஞ் செந்தூரம பண்ணித்தீரு
கள்ளிபோற் றிரியாதே காட்டொணுது
கருத்துறவே யாகோபு சொன்னவாறே. (202)

சொன்னதொரு முன்னூறு செயலறிந்து
துடியான கைபாக வரிசைகண்டு
தன்னயமாய்ச் சரக்கினுட வனுவறிந்து
நாடியே சத்துருமித்துரு வறிந்து
இன்னதெனச் சேர்கையுட நிதானம்பார்த்து
இதமான பொருளறிந்து நிறையுங்கண்டு
பொன்னைவிற்குஞ் செட்டிகையி லேறிட்டானுல்
பூவுலகில் நாசாவாம் பிரியமாமே. (203)

பிரியமாய் நூலைத்தான் படித்துத்தேறி
போக்கோடே நினைவதனி லிருத்திநீயும்
அறிவாலே கண்டுநீ சரக்கைத்தொட்டு
ஆடினாற் பலனாகும் அறிந்துகொள்ளு
சரிவரவே யிதுவெல்லா மறியாமூடர்
சாஸ்திரங்கள் பொய்யென்று தவித்துயேங்கி
உரியிலே நெய்யிருக்க அலைவார்பாவர்
உற்றுணர்ந்து பார்த்தாக்கால் சித்தியாமே. (204)

துரிசுச்சத்து.

செய்கைதா னின்னமொரு சத்துமார்க்கம்
செயமாகச் சொல்லுகிறேன் தேசத்தோர்க்குப்
பையவே யிதுலெகுவு முன்னேபாரு
பகைக்காதே துடிதுடித்துத் திரியாதப்பா
வையகத்தில் பதைபதைத்தா லெல்லாம்பாழாம்
வடிவான சித்தியில்லை வண்மையில்லை
கையினாற் தொட்டதெல்லாங் கரியுமாகும்
கனமாகப் பொறுமையாய்ச் செய்துகொள்ளே. (205)

பொறுமையாய்ச் சத்துவகை புகலக்கேளு
போற்றியெடு நீலனது பலமும்பத்து
வறுமையாய் நாறும்பூ பலமும்யேழு
வடிவான அரைபொடியும் புதுசாய்ராவி
கறுமையா னுமிச்சம் பழச்சார்தன்னில்
கனிவாக நாள்மூன்று ஊறவைத்து
உறுமையாய்ப் பாணிவிட்டு அலம்பிநீயும்
உரையாகப் பலமுரெண் டரையும்போடே. (206)

போட்டுமே கல்வத்திற் பழச்சாறூற்றி
போக்கோடே நாளெட்டு அரைத்துநீயும்
காட்டுமே வில்லைகட்டிக் கதிரில்வைத்துக்
கனிவாக வில்லைக்கிக் கவசங்கேளு
மீட்டுமே சுண்ணும்பு உப்புநேரே
மிதமாக மேனியென்ற சாற்றாலாட்டி
வாட்டுமே வில்லைக்கிக கவசங்கட்டி
வடிவாகப் புடமிட்டு யெடுத்துப்பாரே. (207)

எடுத்துமே மேற்கவசந் தள்ளியிட்டு
இதமாக வெங்காரம் பெட்டிலொன்று
தடுத்துமே விட்டரைத்துக் குகையிலிட்டுத்
தாட்டிகமா யுருக்கிடவே உருகும்பாரு
அடுத்துமே கல்வமிட்டுக் கொடியோன்பாதி
அடைவாகச் சேர்த்துமே பூச்சார்விட்டுப்
படுத்துமே அரைசாமம் பனிரெண்டாகும்
பதிவாக வில்லைபண்ணிக் கதிரில்வையே. (208)

கதிரில்வைத்துக் கவசமது சொல்லக்கேளு
கனிவாகக் கல்லுப்பு சேருநாலு
வதியாக மேனியென்ற சாற்றைவிட்டு
வடிவாக அரைத்துவில்லை புடமுமிட்டுக்
கெதிபெறவே கல்வமிட்டு மேனிநீரால்
கெட்டியா யரைத்துவில்லை சொல்லக்கேளு
பதிவாக முன்வில்லை மேலேயங்கி
பகட்டியதைக் கட்டியே பாகங்கேளே. (209)

பாகமென்ன மேற்கவச மண்ணுசெய்து
பதிவாகப் பெரியபுடம் போட்டெடுத்து
யோகம்வரச் சந்தானி யிடையேசேர்த்து
உண்மையா யிருசாம மாட்டிப்பின்பு
தாகமாய் வில்லைகட்டிக் கதிரிலிட்டுத்
தாட்டிகமா யகலிலிட்டுப் புடமுமிட்டு
ஆகவே புடமிட்டு யெடுத்துநீயும்
அடைவாக உலையிலிட்டு உருக்கிக்கொள்ளே. (210)

உருக்கிடவே செம்பதும் உருகியுள்ளே
உண்மையாய் மேலேதான் சத்துநிற்கும்
அருக்கிடவே செம்பைத்தா னெடுத்துக்கொண்டு
அடைவாகச் சத்தெல்லாங் கல்வமிட்டு
நருக்கியே பாதிநீ கொடியோன்சேர்த்து
நலமாகப் பூச்சாறு நல்கஆட்டி
பருக்கியே கதிரில்வைத்துக் காயப்போடு
பதிவாக யாகோபு பயின்றார்தாமே. (211)

பயின்றதொரு அகலிலிட்டுப் புடத்தைப்போடு
பதிவாக யெடுத்துமே பகரக்கேளு
நயின்றுமே சந்தானி யிடையேசேர்த்து
நலமாக அரைத்துமே யிடுசாமந்தான்
வயின்றுமே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
வளமாகப் புடம்போட்டு உருக்கித்தீரு
தயின்றுமே மூன்போலே செம்புமாகும்
தாட்டிகமாய்ச் செம்பெடுத்துப் பிரம்பாய்வையே. (212)

வைத்திடவே சத்துத்தா னிருந்துதானால்
வாகாக மூன்போலச் செய்துதிரு
உய்த்திட்டுச் செம்பெல்லாங் காரஞ்சேர்த்து
ஒழுங்காக உருக்கியே செம்பைப்பார்த்தால்
நய்த்திட்டுச் சூரியன்போல் நிறமுமாகும்
நபிமார்க ளாடுமொரு செம்புதன்னைப்
பைத்திட்டு வேதையிதில் கவரோகோடி
பாதையிது செம்பவுண்டு பரிந்துகேளே. (213)

பரிந்துமே மாசற்ற வெள்ளிஊதி
பதிவாக யெட்டுநிறை நிறத்துக்கொண்டு
வரிந்துமே அயச்செம்பு ரெண்டுதாக்கு
வர்ணமது பொன்போலே மருவியாடும்
கரிந்துமே யிந்தநிறை தங்கஞ்சேர்த்துக்
கனகமய மாகவே உருக்கித்திரு
பிரிந்துமே மாத்ததுவும் யெட்டுமாகும்
பேசாதே யெடுத்துவிற்றுச் செலவுசெய்யே. (214)

செய்யவே மாத்ததுவும் உசத்தியாகச்
செயமாகச் சொல்லுகிறே னுற்றுக்கேளு
பையவே அயச்செம்பு பலமும்நாலு
பதிவாகத் தங்கம்நால் பரிந்துருக்கி
மெய்யாகத் தகடடித்து ராவிநீயும்
மேன்மைபெறக் கல்வமிட்டு சொல்லக்கேளு
தையவே கெந்திபலம் முக்காலிட்டுத்
தலமான வீரமது பலமுங்காலே. (215)

பலங்கானு யிட்டுமே பழச்சாற்றாலே
பதியஅரை நாளெட்டு மையதாக்கிக்
கலனாக அரைத்துமே வில்லைகட்டிக்
கனிவாக ஓட்டிவிட்டுச் சீலைசெய்து
பிலமாகப் புடமிட்டு யெடுத்துப்பாரு
பெருமையாய்க் கரியாகும் பின்புநீயும்
அலமாகக் கரியென்று மயங்கவேண்டாம்
அன்பாகக் கறுப்புதான் கனகமாமே. (216)

கனகமாங் கரிநிறைக்கி நாலத்தொன்று
கடியதொரு தாழகத்தைச் சுத்திபண்ணி
வனகமாய்ச் சேர்த்தரைத்துப் பூச்சாற்றாலே
வடிவாகச் சிவக்கமட்டும் புடமுமிட்டுத்
தனமாக யெடுத்துப்பார்செந் தூரமாகும்
தருகாவில் வைத்துமே தொழுதுநீயும்
இனமாக வெள்ளியைத்தான் வங்கத்தாலே
இன்பமுற ஊதியே சொல்லக்கேளே. (217)

சொல்லவே மாசகற்றி குற்றம்நீக்கிச்
சுருதிபெறப் பலம்பத்து நிறுத்துநீயும்
வல்லமையாய்ச் செந்தூரம் பலமும்ஒன்று
வடிவாக உருக்குமுகந் தன்னிலீய
நல்லாக பதிபழுக்கு மாத்துபத்தாம்
நானிலத்தில் விற்றமே சிலவுசெய்து
புல்லறிவா யிருந்துமே நாளைப்போக்குப்
புகலாதே ஒருவருக்கும் சொன்னேன்பாரே. (218)

சொன்னதொரு கைபாகச் செந்தூரத்தைத்
துடியாகத் தேனிலிட்டு மண்டலந்தான்
நன்னயமா யுண்டிடவே சொல்லக்கேளு
நாடிவரு நரைதிரையும் நாடாதோடும்
இன்னிலத்தில் நோயெல்லாங் கடலேபுக்கும்
இதமான நரம்பிருகுந் தேகமின்னும்
கன்னல்போல் பெலனுகுங் கண்டுசெய்தால்
கனமாக விந்திறுகுங் கண்டுபாரே. (219)

கண்டுபார் செந்தூர பாகந்தன்னைக்
கணக்கறிந்து கடைசிதனிற் சொன்னேன்பாரு
பண்டுமே பழகினது போலேசெய்தால்
பலனுண்டு பக்குவமாம் பரிந்துநீயும்
கொண்டுபார் மதிபழுக்கும் வேதையாகும்
குடிலங்க ளில்லாது குணமாம்பாரு
தொண்டுசெய்தால் நபிமார்கள் சொல்வாரப்பா
தொல்லுலகில் ரசவாதி தொய்வுமாமே. (220)

ஆமேதான் தங்கத்தைக் கண்டுநீயும்
அடைவாக மனதுதனில் கெர்ச்சிக்காதே
நாமேதான் கெர்ச்சித்தால் மனிதர்காண்பார்
நலமாக உன்னையவர் கொல்வாரப்பா
பூமேவு நிலந்தனிலே யிருக்கவொட்டார்
பூதலத்தில் அரசனுக் கினையினாலே
தாமேதான் தொந்தரவு பட்டுநீயும்
தாட்டிகமா யுயிர்போகுந் தன்மைபாரே. (221)

தன்மைபார் பொன்விக்கப் போனால்நீயும்
தாட்டிகமாய்ச் செட்டியவன் செய்யும்வண்மை
உண்மையாய் நல்லவன்போல் பேசுவான்பார் .
உறுதியாய்ப் பொன்னெடுத்துக் காட்டச்சொல்லிப்
பெண்மையாய் முகம்பார்ப்பான் பேச்சைக்கேட்பான்
பெருமையாய் வாதியென்று அறிந்தானானல்
வண்மையாய்க் கல்லதுவும் ரெண்டுமாகும்
வடிவாகச் சுரசுரப்புக் கல்லுதானே. (222)

சேட்டி மோசம்.

கல்லெடுத்துக் கொடுத்தபொன்னை அழுத்தமாகக்
கணக்கிட்டு வலுவாக உரைப்பானப்பா
வில்லெடுத்து யேறிட்டுப் பார்த்துப்பார்த்து
விரும்பியே மாத்தெட்டு யிருந்தாலப்பா
துல்லபமாய் மாத்தஞ்சு யிருக்குதென்று
துடியில்லை யென்றுசொல்லித் தூக்கிப்பார்த்து
முல்லைமலர் போல்சிரிப்பான் வேண்டாமென்பான்
முடிந்தவனை விட்டுமே சொல்லக்கேளே. (223)

சொல்லவே மறுகடையில் போனபோது
சுருதிபெற யிந்தப்பொன் னுறுரைத்தார்
நல்லவே கேட்டுமே யிருக்கும்போது
நானுரைத்தே னென்றுசொல்லிச் சிரித்துப்பின்பு
அல்லவே அவன்தானுங் கல்லில்ரெட்டி
அடைவாக உரைத்துமே பார்த்துப்பார்த்து
வல்லமையாய் வேண்டாங்கா னென்றுசொல்வார்
வகையாக யிதுவெல்லாம் வளமைதானே. (224)

வளமையா யிப்படிக்கிக் கொண்டுபோன
வகையான தங்கமதை உரைத்துரைத்துத்
தளமையாய் ஆளுக்குக் கொஞ்சம்கொஞ்சம்
தனேதேய்த்துப் பொன்னதுவைத் திருடிக்கொள்வான்
உளமையா யிப்படிக்கிப் போகாமற்தான்
உறுதிபட வாதியென்று பேர்படாதே
களமையாய்ப் பேர்பட்டால் வாதம்வந்தால்
கடிதாக ஒருவருந்தான் நம்பார்பாரே. (225)

நம்பிக்கை யாகவே சொல்லக்கேளு
நலமாக ஒருசெட்டி உனக்குஉண்மை
வம்புசெய்யாப் பேர்பார்த்து அவனைநம்பி
வடிவாக அவனுக்குக் கொஞ்சம்பொன்னு
தம்பமறக் கொடுத்திடவே விற்பானப்பா
தடையறவே யிப்படிக்கி விற்றுவிற்றுக்
கம்பம்போ லிருந்துவிடு உண்டுதேரு
கருணைபெற யாகோபு கருதினுரே. (226)

கருதியே கன்றுக்குப் பாலுவிட்டுக்
கருதியே பால்கறந்த கதைபோலொக்கும்
வருதியே தும்பைவிட்டு மாட்டைத்தேடும்
வடிவொக்கும் வாதிமார் வழக்கமாகும்
நிருதியே தோணுத வாதிக்கித்தான்
நிலேயான துவரையுட பருப்பைக்கண்டால்
பருதியே மாத்தேழு யென்றுசொல்லிப்
படித்துமே சொல்லியே புலம்புவாரே. (227)

புலம்புவார் தெரியாத வாதிமார்கள்
புவியிலுள்ளே வாதியென்று பேரெடுப்பார்
வலம்புவார் பேரெடுத்தால் ஒருபோதுந்தான்
வழியான போததுவு மறையாதப்பா
குலம்புகுந்த வாறதுபோல் கொள்கையாகும்
கொம்பிழந்த மந்திபோல்தி ரிந்தலைந்து
தலம்புகரா செட்டிகையில் விற்கப்போகார்
சவங்கலாய்த் திரிந்தலைந்து மாளுவாரே. (228)

மாளாமல் வாதிக்கி நடத்தைகேளு
வடிவான பரபரப்பு விடவும்வேணும்
கேளாமல் கண்டபொருள் மறைக்கவேணும்
குடிக்காம லுலகத்தி லிருக்கவேணும்
தாளாமல் வயித்தியரைப் போலேசென்று
தாட்டிகமா யாண்டவனைத் துதித்துக்கொண்டு
பாளாகப் போகாது உலகத்தோர்கள்
பத்தியாய் நம்புவார் பதமதாமே. (229)

பதமாகப் பொய்சொல்வார் நிலைத்தவாதி
பக்குவமாய்ச் பேசார்கள் பத்தியாளா
விதமாக நடவார்கள் பொய்சொல்லார்கள்
வேதத்தைப் படிப்பார்கள் பிரியமாகக்
கதமாக ஒருவருடன் பேசமாட்டார்
காரியத்தைப் பார்த்துமே கண்டுகொள்வார்
இதமாக யெவ்வுயிருந் தன்னுயிர்போல்
இருந்துமே பதவிதனி லிருப்பார்தானே. (230)

இருப்பார்கள் மக்காவின் தேசந்தன்னில்
இதமான நபிமார்கள் கோடாகோடி
மருப்பாக வாதத்தைப் பேசிடார்கள்
மகான்களுட அருமையைச் சொல்லப்போகே
வெருப்பாக வேதத்தைப் பேசிக்கொள்வார்
விரித்துமே மனதுதனி லாசையுற்றுத்
துரும்பாகத் தூணாக வாறுசெய்வார்
துடியாக அல்லாவைத் துதித்துப்பாரே. (231)

துதிக்கவே வாதத்தைச் சொன்னேன்பாரு
　　துடியாக யெல்லோர்க்குஞ் சொல்லவில்லை
பதிக்கவே கோடியிலே ஒருவருக்குப்
　　பாவித்தே னவர்கண்டு பிடித்துக்கொள்வார்
கதிக்கவே ஒருவருக்குங் காட்டமாட்டார்
　　காரியத்தைப் பார்த்துமே கருதுவார்கள்
நதிக்கவே சிறுபிள்ளை போலிருப்பார்
　　நாதாந்த யாகோபு நலஞ்சொன்னாரே. (232)

தாழகச்செம்பு.

நலமாக யின்னமொன்று தாளகத்தில்
　　நாடியே செம்பெடுக்க நடக்கைகேளு
வலமாக வீரமொடு காரமோடு
　　வடிவான தாளகமுந் துருசுநாலும்
கலனாக வகைக்கிஒரு பலம்நிறுத்து
　　கடிதாகப் பழச்சாறு பிழிந்துவிட்டுத்
தலமாக நாலுநா ளரைத்துமைபோல்
　　தாட்டிகமாய்ப் பின்னுமொரு தகைமைகேளே. (233)

தகைமையா யரைபொடியும் பலமோஒன்று
　　தனியாகப் பழச்சாற்றி லூறவைத்து
அகைமையாய் மூன்றுநாள் சென்றபின்பு
　　அதட்டியே கழுவியதை உலறப்போட்டு
நகைமையாய் முன்னரைத்த மருந்திலேமேட
　　நாட்டியே சேர்த்தரைத்து வில்லைகட்டி
வகைமையாய்க் கதிரில்வைத்துக் காயப்போட்டு
　　வடிவாக ஒட்டிலிட்டுப் புடத்தைப்போடே. (234)

புடம்போட்டு யெடுத்துமே குகையிலிட்டுப்
　　புகழாக உருக்கிடவே சத்துமாகும்
திடமாக வெங்கலம்போல் மணியுமாகும்
　　திட்டமாய்க் கல்வமிட்டு வெங்காரந்தான்
அடமாகக் கல்வாசி சேர்த்தரைத்து
　　அன்பாகக் கதிரில்வைத்துப் புடமுமிட்டு
நடமாகக் குகையிலிட்டு உருக்கித்திரு
　　நாடியே கசடகத்தி யெடுத்துக்கொள்ளே. (235)

எடுத்துமே சத்தினிடை பாதிதானும்
இதமாகக் கொடியோனைப் பாதிசேர்த்து
அடுத்துமே பூச்சாறு விட்டரைத்து
அடைவாக வில்லைகட்டிக் கதிரில்வைத்து
நடுத்துமே ஒட்டிவிட்டுப் புடமுமிட்டு
நலமாக வெங்கார மிடையேசேர்த்துக்
கடுத்துமே சேர்த்துஅரை பூச்சாற்றுலே
கடிதாக வில்லைபண்ணிக் கதிரில்வையே. (236)

கதிரில்வைத்து ஓட்டிவிட்டுப் புடமுமிட்டுக்
கணக்காக வெடுத்துமே சொல்லக்கேளு
பதிவாகப் புதுக்குகையி லிட்டுருக்குப்
பண்பாக உருகியது செம்புமாகும்
விதியாளி யானுக்கால் சொல்லக்கேளு
விதமான செம்புநிறங் கதிர்போலாகும்
கெதியாக வெடுத்துமே மதியிலெட்டுக்
கெடிபடவே ரெண்டும்மே உருக்கிடாயே. (237)

உருக்கிடவே பசுமைபோ லாறுமாத்து
உண்மையிடைக் கிடைதானுந் தங்கஞ்சேர
நறுக்கிடவே மாத்தெட்டுக் காணும்நல்லா
நலபாக வித்துமேக உண்டுதேறு
பறுக்கிடவே யிதைச்செலவு பண்ணிக்கொண்டு
பதியான செந்தூரம் பண்ணநன்று
கருக்கிடவே பாகமாய்ச் செய்துகொள்ளு
கதிபெருக யாகோபு கருணைதானே. (238)

கருணையாய்த் தாளகத்தின் செம்புஒன்று
கனத்ததோர் தங்கமென்று சேர்த்துருக்கி
அருணையாய்த் தகடுதட்டிச் சொல்லக்கேளு
அடைவான மனோசிலையும் வீரம்கெந்தம்
வருணையா யிடைக்கிடைதான் பூச்சார்விட்டு
வடிவாக யிருசாம மரைத்துநீதான்
பருணையாய்த் தகடுதனில் பூசிப்பூசிப்
பதியவே புடம்போட்டு யெடுத்துக்கொள்ளே. (239)

எடுத்திட்டுப் பார்க்கையிலே நொருங்கும்நல்லா
இதமாக அரைத்துமே வில்லையாக்கி
அடுத்துமே ரவியில்வைத்துக் காயப்போடு
அடைவாகப் புதுஅகலில் வைத்துமூடி
நடுத்துமே புடம்போடு செந்தூரமாகும்
நலமான செந்தூரங் கண்கொள்ளாது
விடுத்துமே மதிபத்து ரெண்டுசேர
விதமாகத் தங்கமாம் விடுத்துப்பாரே. (240)

விடுத்துமே யிதைவிற்றுச் செலவுசெய்து
வீணருடன் பேசாதே விரும்பிநீயும்
அடுத்துமே பணவிடைதான் மண்டலத்தில்
அடைவாக உண்டபின்பு சொல்லக்கேளு
நடுத்துமே நல்லெண்ணை கைப்புத்தள்ளு
நலமாக உண்டிடவே நாட்டங்கேளு
விடுத்துமே கல்த்தூணுந் திரேகந்தானும்
வேதாந்த யாகோபு விதஞ்சொன்னாரே. (241)

சொன்னதொரு அரிதாரப் பொன்னுக்குத்தான்
சுருதிபெற ஆணியுண்டோ சொல்லுவீரா
நன்னயமாய் மாத்தேறும் பீர்க்கம்பூம்போன்
நலமாகத் தானிருக்கும் அந்தப்பொன்னு
தின்னமில்லாப் பொன்வைத்துத் தொழுதுபோற்றுச்
சிறப்பாக யிவ்வறுணம் சொல்லப்போகா
கன்னல்போல் இந்துடனே வெள்ளிசெம்பு
கனமாகச் சேர்த்திடவே பத்துமாமே. (242)

பத்தான தாளகத்தின் செம்புதன்னைப்
பதிவான நபிமார்கள் வைத்துக்காட்டச்
சித்தாக நான்வைத்து கடையில்விற்றுச்
செலவழித்தேன் கைகுளிரச் சித்திமெத்த
முத்தான அரிதாரச் செம்புபோல
மூவுலகில் கண்டதில்லை முறைபோகோடிச்
சத்தாக யிருந்ததொரு சத்துதன்னைத்
தடையறவே செம்புபண்ணச் சாட்சியாமே. (243)

சாச்சியிலாப் பாகமாய்ச் செய்துகொள்ளு
சவுங்கலாய்த் திரியாதே பெரியோர்தன்னை
வாச்சியாய் வணங்கியே கேட்டுக்கொள்ளு
வடிவாக நபிமார்க ளாடுமொட்டு
தாச்சிவா ராதபடி செய்துகொள்ளு
தடையில்லாப் பொன்னகும் சார்ந்துபாரு
பாச்சியே வெள்ளிதன்னில் பொன்னெடுத்துப்
பகர்ந்து யாகோபு பலன்சொன்னாரே. (244)

மயில்ரோமச்செம்பு.

பலனாக யின்னமொரு ரோமச்செம்பு
பாகமாய்ச் சொல்லுகிறேன் பரிந்துகேளு
பிலனாக மயிலிறகு குச்சிபோக்கிப்
பிரித்துநீ மயிரதுவும் பலமும்பத்து
அலனாக யிரும்பான சட்டியிட்டு
அதிலூத்து நல்லெண்ணை ரோமம்போட்டுக்
கலனாக உருகையிலே அரபொடியும்பத்து
கடிதாகப் பிரட்டிநீ யெடுத்துக்கொள்ளே. (245)

எடுத்தபின்பு சொல்லுகிறே னாதக்கேளு
இதமாகத் துருசுபலம் ஐம்பதாகும்
அடுத்துமே செம்புபல முப்பதாகும்
அடைவான வெங்காரம் பலமுஅஞ்சு
தொடுத்துமே நல்லெண்ணை சேருபத்துச்
சுயமாக விட்டுமே அய்ச்சட்டியிட்டுப்
படுத்துமே கொதிக்கவிடு கரைந்துபோகும்
பதிவாக மொருமொருப்பா யெரித்துவாங்கே. (246)

வாங்கியே முன்கருக்கும் அரபொடியைத்தான்
வடிவாகப் பிசரிவைத்து மார்க்கங்கேளு
தாங்கியே புதுக்குகையி லிட்டுமூடித்
தன்மைபெற உருக்கிடவே சத்துமாகும்
தேங்கியே பின்னுமொரு திரமுமிட்டுத்
திரளாம வுருக்கியே சத்தெடுத்துப்
பாங்கியே மருபங்கு கூட்டிஊது
பதிவாக உருகியது மணியுமாகும். (247)

மணியெடுத்து உடைத்துப்பார் வெங்கலமாய்க்காணும்
மயமாக வெங்கார மிட்டுகல்லாய்த்
தனியாக உருக்கியெடு கசடகத்துத்
தாக்கான மணியதனைக் கல்வத்திட்டுக்
கனியாகக் கொடியோனைப் பாதிசேர்த்துக்
கணக்காகப் பூச்சாற்று லரைத்துவில்லை
வணியாகக் கதிரில்வைத்துக் காயப்போடு
வடிவாக ஒட்டிலிட்டுப் புடத்தைப்போடே. (248)

புடம்போட்டு யெடுத்துப்பார் கருப்பாய்நிற்கும்
பின்புதான் வெங்காரம் பாதியிட்டு
நடம்போட்டுப் பூச்சாறு விட்டுஆட்டி
நலமாக வில்லைபண்ணிக் காயவைத்து
வடம்போட்டு ஒட்டிலிட்டுப் புடத்தைப்போட்டு
வடிவாக யெடுத்துமே மார்க்கங்கேளு
தடம்போட்டு குகையிலிட்டு உருக்கிப்பாரு
தடையறவே மயூரமது செம்புமாமே. (249)

செம்பெடுத்துப் பிரம்பாலே வைத்துக்கொண்டு
சிறப்பாகக் கரடெடுத்துக் கல்வத்திட்டு
நம்பியே கொடியோனைப் பாதிவைத்து
நலமாகப் பூச்சாறு விட்டுஆட்டிக்
கம்பமற வில்லைக்கட்டிக் கதிரில்வைத்துக்
கணக்காகப் புடமிட்டு யெடுத்துநீயும்
தம்பிரான் செயலாலே சந்தானிகூட்டு
தடையறவே பூச்சாறு தன்னிலாட்டே. (250)

ஆட்டியே புடமிட்டு உருகச்செம்பாம்
அடைவாகச் செம்புதான் வருதுமட்டும்
கூட்டியே யிப்படிக்கி அரைத்தரைத்துக்
குணமாகப் புடமிட்டு உருக்கித்திரு
காட்டியே செம்பெல்லா மெடுத்துக்கொள்ளு
நலமாகக் காரமிட்டு உருக்கித்திரு
வாட்டியேக சடகலும் பொன்போலாடும்
வடிவான செம்பதுதான் மார்க்கமாமே. (251)

மார்க்கமாய்ச் செம்பெடுத்து மோதிரம்பண்ணி
வடிவாகப் போட்டுமே சொல்லக்கேளு
ஆர்க்கமாய் நல்லரவு பாம்புதன்னை
அடைவாகப் பிடித்துப்பார் கடித்துதானல்
தார்க்கமாய் விஷங்களது யேறிடாது
தடையறவே பாம்புதான் செத்துப்போகும்
கார்க்குமே பாம்புதனைக் கூப்பிட்டாக்கால்
கடைகெட்டு வந்துவிடும் கருதிப்பாரே. (252)

கருதியே யிச்செம்பை யெடுத்துநீயும்
கனமாக வெள்ளிதனை ஊதிக்கொண்டு
வருதியே மாசுத்த வெள்ளியாக்கி
வடிவாக யெட்டுருக்கு முகத்திற்தானும்
பருதியே ரெண்டுகுடு செம்பைத்தானும்
பதிவாக வாங்கியது உருகிநிற்கும்
நருதியே பொன்போலே ஆடும்பாரு
நலமாக உருக்கியே யெடுத்துக்கொள்ளே. (253)

எடுத்துமே யிக்தயிடை தங்கத்தாயை
இதமாக வைத்துநீ உருக்கிப்பாரு
நடுத்துமே மாத்ததுவும் யெட்டேகாலாம்
நலமாக யிதைவிற்றுச் சிலவுசெய்து
விடுத்துமே உண்டுடுத்தி யிருந்துகொண்டு
உண்டான யிச்செம்பு பெரியவேதை
அடுத்துமே செய்திடவே பலனுமாகும்
ஆதியாம் உறுதியிது அருமைகேளே. (254)

அருமையாய் மயிலிறகுச் செம்புதன்னை
அடைவாகப் பலமுருக்கிப் பின்புநீயும்
வருமையாய்த் தங்கமது பலமுமொன்று
வடிவாகச் சேர்த்துருக்கித் தகடடித்துப்
பருமையாய்க் கெந்தியுடன் சூடன்தானும்
பாங்காக வீரமுடன் மூன்றுமொன்றாய்
நருமையாய் பழச்சாரு விட்டுச்சாமம்
நலமாக அரைத்துமே நாடக்கேளே. (255)

நாட்டமாய் முன்தகட்டின் மேலேகட்டி
நலமாக நொருங்கமட்டும் புடமுமிட்டுக்
கூட்டமாய்க் கரிபோலே தூளாய்ப்போனல்
குணமான மனேசிலேதா னுலிலொன்று
தேட்டமாய்ச் சேர்த்துஅரை அல்லிப்பூச்சார்
திரமாக அரைத்துவில்லை காயவைத்து
மூட்டவே ஓட்டிலிட்டுப் புடத்தைப்போட்டு
முனிவாகச் செந்தூர மாகும்பாரே. (256)

ஆகுமே செந்தூர முருக்கம்பூவாம்
அடைவாக மதிபத்துக் கொன்றுவிட்டால்
வாகுபெறத் தங்கமாம் யின்னதென்று
வகையாகச் சொல்லாதே மருவிநின்று
தாகுபெற வித்திட்டுச் செலவுசெய்து
தாட்டிகமா யுண்டுடுத்திப் பின்புமீயும்
பாகுபெற மனதுருகிப் பத்தியாக
பதிவாக நின்றவனே நபிமாராமே. (257)

நபிமாரா யானதொரு நட்புக்கேளு
நலமான ஞானத்தைப் படித்ததாலே
கபியான ஆண்டவனைத் தொழுததாலே
கடிதான வேதத்தைக் கற்றதாலே
வபியான பொய்மறந்த மார்க்கத்தாலே
வடிவான வாதங்கள் வந்ததாலே
அபிமானமாய் நடந்த அறிவினலே
ஆதியாம் நபிமாரா யிருந்தார்தானே. (258)

இருந்திட்ட மயிலிறகுச் செம்புபோலே
இதமான செம்பில்லை உற்றுக்கேளு
வருந்திட்டு யிச்செம்பை யெடுத்துக்கொண்டால்
வாழ்வாகும் பொன்னுதான் குளிர்ச்சியாகும்
அருந்திட்ட குளிகைக்கி யிந்தச்செம்பை
அடைவாகக் குடுத்திட்டால் ஒளிவுமாகும்
பருந்துபோல் நடையாகும் பாரிலோர்க்குப்
பார்த்திட்டால் யெல்லாமுஞ் சித்தியாமே. (259)

சித்திபெற வேணுமென்றால் சத்தைப்பாரு
சிறப்பாகச் செம்பெடுத்து மதியிலூட்டு
புத்திவர வேணுமென்றால் செந்தூரத்தைப்
போக்கோடே உண்டிடவே பெலனுமாகும்
சத்தியமா யின்னூலில் வெளியாய்ச்சொன்னேன்
சார்ந்திட்டால் நபிமார்க்குத் தாச்சியில்லை
வித்தகராய்ப் படித்தாலே நீதியாகும்
விதமாக யாகோபு விளம்பினாரே. (260)

விரும்பியே தங்கத்தைக் கையில்வைத்து
விதமாகச் செம்பெடுத்துச் சேர்த்துருக்கி
அரும்பியே புடம்போடச் செந்தூரமாகும்
அடைவாக வைத்துமே உண்டுதேறு
கரும்புபோல் மதுரங்க ளாகும்பாரு
கனகமய மானதொரு செம்புமாக்கம்
துரும்பதுதான் தூணான வாறுபோல
சொல்முறைகள் தவறாதே செய்துபாரே. (261)

செய்துபார் தங்கமில்லாச் செந்தூரமெல்லாம்
சித்தியில்லை தூரத்திலெறிந்துபோடு
பைதுபார் சத்துக்கு யிரும்புயில்லாப்
பதிவான சத்தெல்லாந் தூரத்தள்ளு
நைந்துபார் பாகமில்லாச் செம்புவெல்லாம்
நல்லமதி பழுக்காது நாட்டிலோர்க்கு
வெய்துபார் பெனமில்லா வாதிமார்கள்
விதியான நூலில்லா வினையத்தோரே. (262)

வினையமென்ற நூலினுட வர்மம்பார்த்து
விதமாகக் கைபாக வரிசைகண்டு
தினையதுபோல் பொருக்கியே சேர்த்துநீயும்
திடமாகச் செய்தாக்கால் சித்தியுண்டு
கனைத்தலொடு நூலில்லா வாதம்பார்த்தால்
கசடாகும் ஒருபொருளுந் தெரியாதாகும்
சுனையில்நின்ற தண்ணீர்போ லாகும்நேர்மை
சுருக்காக நாட்டிலே காணலாமே. (263)

காணலாம் நபிமாரைக் கண்டுநீயும்
கலக்கமற்றுத் தொழுதுமே கருணைகூர்ந்து
வாணலாம் அவர்மனம்போல் வேலைசெய்து
வடிவாகத் தொண்டானல் சொல்லுவார்கள்
நாணவே சொல்வார் பயமும்வேண்டாம்
நலமான கைமுறையை நாடிச்சொல்வார்
பூணவே பூண்டாக்கால் நினைவுதன்னில்
புகலரிய வாதவொளி காணலாமே. (264)

காந்தச்செம்பு.

காணவே காந்தத்தின் செம்புகேளு
கருத்தாக கைபாக வரிசைசொல்வேன்
யீனவே கல்க்காந்தந் தன்னைவாங்கி
இதமான காணத்தின் கிஷாயமிட்டுத்
தோணவே அவித்துயெடு சுத்தியாச்சுத்
துடியாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
வாணவே துருசியது முப்பதாகும்
வடிவான நாத்தயது பலமுங்கேளே. (265)

கேளுமே பலமிருபத் திரண்டுமாகும்
கெடியாகக் கல்வமிட்டுச் சொல்லக்கேளு
நாளுமே பழச்சாறு விட்டுநெல்லா
நாளாறு நாளரைத்து வில்லைகட்டிப்
பாளுமே போகாமல் கதிரில்வைத்துப்
பதிவாகக் கல்லுப்புச் சேறுநாளு
தூளுமே மேனியென்ற சாறுவிட்டுத்
துப்பரவாய் தானரைத்துக் கவசங்கட்டே. (266)

கட்டியே அதின்பேரில் மண்ணுசெய்து
சதிபெறவே புடமிட்டு யெடுத்துப்பாரு
நட்டியே கரிபோலே தூளாய்நிற்கும்
நலமான தூளதனைக் குகையிலிட்டுப்
பட்டியே உருக்கிடவே மணியுமாகும்
பதிவான வெங்கலம்போல் சத்துமாகும்
தட்டியே யிப்படிக்கிக் காரங்கூட்டித்
தடையறவே அஞ்சுதர முருக்கிடாயே. (267)

உருக்கிடவே கசடகத்தி யெடுத்துக்கல்வம்
உறுதியா யிட்டுமே சொல்லக்கேளு
நருக்கிடவே கொடியோனைப் பாதியிட்டு
நலமாகப் பூச்சாற்றால் நல்கஆட்டி
கருக்கிடவே யாளேழு அரைத்துவில்லை
கதிபெருகக் காயவைத்து ஓட்டிவிட்டுப்
பெருக்கிடவே புடம்போட்டு யெடுத்துக்கொள்ளு
பேசரிய வங்கத்தின் பெருமைகேளே. (268)

வங்க சுண்ணம்.

பெருமையாய்க் காரீயம் பலமும்நாலு
பேணியே கரண்டியிட்டு உருக்கிக்கொண்டு
அருமையாய் காச்சலஞ்சு உப்புதன்னை
அடைவாகப் பாதியிடு கிண்டுகிண்டு
நருமையாய்ச் சாமமது சென்றபின்பு
நலமாக மஞ்சளது போலேகாணும்
வருமையாய்ப் பாகமது தானிருத்தி
வடிவாகச் சுரண்டியே மார்க்கங்கேளே. (269)

மார்க்கமாய்ச் சுரண்டியெடு பின்புநீயும்
மயங்காமல் முன்போட்ட வில்லைநாலில்
ஆர்க்கமா யொன்றிட்டுக் கரண்டிதன்னில்
அடைவாக உருக்கியே வருகும்போது
தூர்க்கமாய்ப் புடம்போட்ட காந்தச்செம்பைத்
துடியாக நெருங்கியே சொல்லக்கேளு
பார்க்கவே வங்கசெந் தூரந்தானும்
பதிவாக உருக்குமுகந் தன்னிலீயே. (270)

ஈய்ந்திட்டுக் கூடதனுல் கிண்டிக்கிண்டி
இயல்பாகப் பின்பெடுத்துக் கல்வமிட்டு
வாய்ந்திட்ட அன்னமென்ற சோற்றாலாட்டி
வகைபாகப் புடமிட்டு யெடுத்துக்கல்வம்
சாய்ந்திட்டு யிட்டுமே சோற்றாலாட்டிச்
சரியாக யிப்படிக்கிப் புடமும்அஞ்சு
ஏய்ந்திட்டுப் புடம்போட்டு யெடுத்துநீயும்
இதமாகக் குகைப்பிலிட்டு உருக்கித்தீரே. (271)

உருக்கிடவே செம்பைத்தா னேடொட்டாது
உறவாக்கிப் பிடித்துமே யிழுத்துக்கல்வி
நருக்கிட்டு உருகியே மணியாய்நிற்கும்
நாதாந்த நபிமார்க ளாடுமோட்டு
கருக்கிட்டுக் காந்தமது வைத்திருந்த
கடிதான செம்பைத்தான் யீயம்நல்லா
பருக்கிட்டு யிழுத்துமே வைத்துக்கொள்ளும்
பதிவாகத் தட்டியே யெடுத்துக்கொள்ளே. (272)

எடுத்துமே நாளத்தி லிட்டுநீயும்
இதமாகக் கொஞ்சமா யூதிப்போடு
அடுத்துமே யெடுத்துநீ வெள்ளியேழு
அடைவாகக் காந்தத்தின் செம்புமூன்று
கொடுத்துமே தங்கமொன்று சேர்த்துவூது
குணமான பொன்னுகுங் கூர்ந்துபாரு
படுத்துமே மாத்தநுவும் யெட்டுமோகும்
பதிவான யாகோபு பலன்சொன்னரே. (273)

சொன்னதொரு காந்தத்தின் செம்புஒன்று
துடியான தங்கமொன்று சேர்த்துருக்கி
நன்னயமா யூதியே உருக்கிக்கொண்டு
நலமாகத் தகடடித்து நாட்டங்கேளு
சின்னமாய் நாத்தமொடு சூடன்வீரம்
சிறப்பாக வகைக்கொன்று நிறுத்துநீயும்
கன்னல்போல் கல்வமிட்டு அரைகால்நாமம்
கருத்துறவே அஞ்சாகப் பிரித்துக்கொள்ளே. (274)

பிறித்துமே ஒருபங்கு பூச்சாறுலே
போக்கோடே அரைத்துமே தகட்டிற்பூசி
வறித்துமே காயவைத்துப் புடமுமிட்டு
வகையாகத் தகடைபோற் சுருங்கும்போது
நறித்துமே பின்பொருக்கால் பூசிப்பூசி
நலமாகப் புடம்போடு நொறுங்கமட்டும்
கறுத்துமே நொருங்கியதோர் தகட்டைத்தானும்
கல்வமிட்டு அரைக்கவே சொல்லக்கேளே. (275)

சொல்லவே நாலிலொன்று சிலையைச்சேர்த்துச்
சுகமாகப் பூச்சாற்றை விட்டுநேக
நல்லாக அரைத்துமே வில்லைகட்டி
நலமாகக் கதிரில்வைத்து ஒட்டிலிட்டு
மெல்லவே புடம்போட்டு யெடுத்துப்பாரு
மேன்மைபெறச் செந்தூரம் அருணன்போலாம்
கல்லவே பெரியகுரு வாகுமிந்தக்
கைகண்ட தொழிலையுந்தான் கருத்தாய்ப்பண்ணே. (276)

கருத்தாகச் செந்தூரம் வெள்ளிதன்னில்
கனிவாக யிருபத்து ஒன்றுயீய
வருத்தாக மாத்தது வும் பதினாறும்
வடிவான தங்கமது வழக்கமெத்த
உருத்தாகச் சொன்னதினால் பலன்தானேது
உறுதிபெறப் பாகமாய்ச் செய்துகொள்ளு
பெருக்கவே செய்திட்டு வித்துத்தேறு
பேதையர்போல் திரியாதே பேணிப்பாரே. (227)

பேணியே உலகத்தில் வாதமார்க்கம்
பிரட்டாக யிருக்குதென்று உலகப்பேய்கள்
நாணியே சொல்லிடுவார் ஒன்றுங்காணார்
நலமில்லாத் துற்புத்தி நினைப்பாரப்பா
தோணிபோல் புத்திதனி லெண்ணியெண்ணி
துடியாகப் பேராசைப் பட்டுப்பட்டு
காணியே போச்சுதென்பார் கரைகாணார்கள்
கருத்தில்லா உலகத்தில் மட்டைதானே. (278)

மட்டையாய்ப் புத்தியில்லா யரபாரங்கள்
மடையர்போல் பண்ணியே சிவனத்தை
நிட்டையாய்ச் செய்துமே சாம்பல்பூசி
நிலையில்லாச் செம்பினால் சாமிபண்ணி
விட்டகுறை வருமென்று கும்பிட்டேத்தி
வீணாய்ப் போகியே திரிவாரப்பா
சட்டைமுனி போலவே யிருந்தால்வாதம்
தான்வருகு மென்றுயா கோசொன்னாரே. (279)

சொன்னதொரு முனிவர்சித்தர் யோகியெல்லாம்
சொற்பெரிய வழலையென்றும் பூனிரென்றும்
நன்னயமாய்ப் பேரண்டம் பிள்ளையென்றும்
நலமாகக் கொடியென்றுங் குடநீரென்றும்
இன்னிலத்தில் சாஸ்திரங்கள் மறைப்பாய்ச்சொன்னார்
இடும்பரெல்லாம் பரிபாஷை தன்னைப்பார்த்து
தன்னிலத்தி லிதுவெல்லா மெடுத்துப்பார்த்து
தாட்டிகமா யொன்றுமில்லை அலைகுவாரே. (280)

அலையாமல் வழலையென்ற பேருதானும்
ஆதியாங் கரும்பொன்னு அறிந்துபாரு
நிலையான கருவழலை வங்கமாச்சு
நேரான வழலையது துருசுமாச்சு
கலையான கெந்தகந்தான் வழலைபாச்சுக்
கருத்துரவே யிதைவிட்டு முன்னேசொன்ன
தலையான பிண்டத்தைத் தேடிக்கெட்டு
சாஸ்திரங்கள் பொய்யென்பார் தரணியோர்கே. (281)

தரணியிலே பொன்னறியா வாதிதானும்
தாட்டிகமாய்ச் செம்புருக்கி மூலிதன்னில்
காணிகமா வுருக்கியே சாய்த்துமேதான்
கனகமது பிரக்குமென்று வெள்ளிதன்னில்
வரணிகமாய் மட்டங்கள் சேர்த்துப்பொன்னை
வடிவாக யிடைசேர்த்துத் தகடுதட்டித்
தொனியாவில் உப்புடனே காவிசேர்த்துத்
துலங்கவே புடம்போட்டுத் திரிவார்பாரே. (282)

திரிவார்கள் புடம்போட்ட வுடனே தானே
திடமில்லாச் செம்பதுவும் கழண்டுபோகும்
அறியாத படிக்குமே வெள்ளிபின்னே
அடைவாகக் களண்டுமே போனபின்பு
தெரியாமல் வைத்ததங்க மிறங்கிப்போகும்
திடமில்லை பின்னுமொரு மூலிதேடிப்
பரியாசம் பண்ணவே திரிவாரப்பா
பகாரிய நிர்மூட வாதிதானே. (283)

தானென்ற நீதியுள்ள வாதிதானும்
தவித்துமே போகாமற் சத்தெடுத்து
ஊனென்ற சத்தைத்தான் செம்பதாக்கி
உறவாக வெள்ளிதனி லுருக்கித்தாக்கிக்
கானென்ற பொன்போலே யிருக்குந்தானே
கடிதான பொன்சேர்த்து லாபமாக
வானென்று யெடுப்பார்கள் புத்தியுள்ளோர்
வடிவாக யாகோபு வகைசொன்னாரே. (284)

வரிசையாய் நூல்பார்த்து வர்மங்கண்டு
வணக்கமென்ன சத்துவகை பிறித்துவாதி
உரிசையா யினங்கண்டு சேர்வைகண்டு
உண்மையாய்ச் சத்துருமித் துருவறிந்து
பரிசையாய் சரக்கிலுட பலனறிந்து
பதிவாகச் செம்பெடுப்பார் நபிமாரப்பா
குரிசைதர வெள்ளிதனில் பழுக்கும்நேர்மை
குணமுள்ளோர் செய்திவிடும் கூறுதானே. (285)

கூறாக யிப்பாகந் தப்பிப்போனால்
குணங்கெட்டுப் போகுமது கூர்ந்துதள்ளு
ஆறாக உடலுக்குள் பஞ்சபூதம்
அதுதப்பில் காயமது அலைந்துபோகும்
நேராக வாதத்துக் கொன்றுதப்பில்
நிர்ணயமா வாராது நிலைகுடாது
பேராக வாதியென்று பேரும்பட்டு
பிரபலமாய்த் திரிவார்கள் பேயர்தானே. (286)

போது விதி.

தானென்ற யெலுமிச்சம் பழமில்லாட்டால்
தடையற்று அயத்தினுட கசடறாது
வானென்ற கெந்தியது சேராவிட்டால்
வர்ணமது பிறக்காது மார்க்கம்பொய்யாம்
ஊனென்ற வெங்காரம் விட்டாற்கேளு
உயர்ந்துநின்ற யிரும்பதுவுஞ் சவுடறாது
பானென்ற சூடனில்லாச் சத்துவெல்லாம்
பதிவாகச் செம்புதான் யெடுபடாதே. (287)

ஊடுபடாச் சத்தினுடன் பிசறிக்கொண்டு
ஏத்தமாய்ச் செம்புநிறம் இல்லைஇல்லை
தடுபடாச் செய்துமே கெட்டுப்போச்சு
தாட்டிகமாய்ச் சொல்லியே புலம்புவார்கள்
படுபாவி சொன்னதுதான் பொய்யோவென்பார்
பகாறிது சொல்லார்க ளென்பார்கோடி
கடுமையா யிப்படிக்கிப் புலம்புவார்கள்
கருத்தரியா வாதிக்குச் சொல்லுவாயே. (288)

அயச்செம்பு.

சொல்லவே யின்னமொரு செம்புகேளு
சுருக்காக யிதுலெவுகு முன்னேபாரு
நல்லவே அரபொடியும் பலமும்அஞ்சு
நலமாக எலுமிச்சம் பழச்சார்விட்டு
கல்லவே நாள்மூன்று ஊரவைத்துக்
கழுவியதைக் கல்வத்திற் போட்டுநீயும்
செல்லவே துருசியது பலமும்ரெண்டு
சீராகப் பத்தாகும் அதனிற்போடே. (289)

போடவே கெந்தியது பத்துஅஞ்சு
பிலமான சூடனது பலமும்பத்து
நாடவே சிகரமது பலமும்அஞ்சு
நன்றாகப் போட்டுமே பழச்சார்விட்டு
காடவே நாளெட்டு அரைத்துவில்லை
கனிவாகத் தட்டியே கதிரில்வைத்து
ஊடவே கிளிஞ்சியென்ற சுண்ணம்நேரே
உறவாக மேனியென்ற சாற்றாலாட்டே. (290)

ஆட்டியே முன்வில்லை கவசங்கட்டி
அருள்பெருக அதின்பேரில் மண்ணுசீலை
நாட்டியே கட்டினபின் சொல்லக்கேளு
நலமாகப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
கூட்டியே சிவந்துவிடு முருக்கம்பூப்போல்
குணமாக யெடுத்துமே புரம்பாய்வைத்து
தாட்டிகமாய்க் காரீயம் பலமும்நாலு
தடையறவே காண்டிதனி லுருக்கிடாயே. (291)

வங்க சுத்தி.

உருக்கிட்டு ஆட்டமரி தன்னிலிட்டு
உறவாகப் பதினெருக்கால் உருக்கிச்சாய்க்கப்
பருக்கிட்டுக் கருநீரு அத்துப்போகும்
பதிவாகக் கரண்டிதனில் வைத்துருக்கி
நருக்கிட்டு வெடியுப்பு அஞ்சாங்காச்சல்
நலமாக வங்கயிடை போட்டுக்கிண்டு
கருக்கிட்டு ஒருசாமங் கிண்டக்கிண்டக்
கனமாக மஞ்சள்போ லாகும்பாரே. (292)

ஆகுமே மஞ்சள்தனை உரைத்துநீயும்
அடைவாக வங்கசெந் தூரமிட்டால்
ஏகுமே உண்ணிரெத்தம் போல்சிவக்கும்
எடுத்துமே பிரம்பாக வைத்துக்கொண்டு
நாகுமே கல்லுப்பு உருக்கக்கேளு
நலமாகக் கல்லுப்பு சேருரெண்டு
ஏகுமே சீனமலு சேருரெண்டு
இன்பமாய்ப் பழச்சாறு விட்டுஆட்டே. (293)

ஆட்டியே ரெண்டுநா ளானபின்பு
அடைவாக எலுமிச்சம் பழச்சார்விட்டு
காட்டியே சேருரெண்டு விட்டுநீயும்
கனிவாகக் கொதியிட்டு ஓட்டக்காச்சி
பாட்டியே கரண்டியிட்டு உலையில்வைத்து
பார்த்திட்டு உருக்கிடவே கருத்துநிற்கும்
வாட்டியே பின்னும்நீ குமூரஊது
வடிவாக மஞ்சள்போ லுருகும்பாரே. (294)

உருகின்ற உப்பெடுத்து வைத்துக்கொண்டு
உறுதிபெற மூன்வங்க செந்தூரத்தில்
அருதியாய் நாலிலொன்று சேர்த்துநீயும்
அடைவாக அன்னத்தா லரைத்துவில்லை
பருதியாய் வில்லைகட்டிக் கதிரில்வைத்து
பதிவாகப் புதுஓட்டில் வைத்துமூடி
நருதியாய்ப் பிடமிட்டு யெடுத்துப்பாரு
நலமாகச் சிவப்பாகும் நன்மையாமே. (295)

நன்மையாய்ப் பின்னுமந்தச் செந்தூரத்தை
நாடியே கல்வமிட்டு அரை அண்ணத்தால்
தின்மையாய் வில்லைகட்டிக் கதிரில்வைத்துத்
திடமாக நல்லாகக் காய்ந்தபின்பு
தன்மையாய்ப் புதுஅகலில் வைத்துமூடி
தாட்டிகமாய்ப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
வன்மையாய் மாதளம்பூ நிறமதாக
வகையாக ஆகமட்டும் புடத்தைப்போடே. (296)

புடம்போட்டு யெடுத்துப்பார் செந்தூரம்
புகலரிய செந்தூரம் புவியிற்றானும்
அடம்போடு யெல்லாமுந் தங்கமாகும்
அடைவாக வகைவிபரம் அறியக்கேளு
நடம்போடு முன்போட்ட அயச்செந்தூரம்
நாலிலொன்று வஙகசெந் தூரத்தோடே
கடம்போட்டுச் சேர்த்துமே கல்வமிட்டுக்
கத்தாழஞ் சோறுதன்னா லரைத்திடாயே. (297)

அரைத்துமே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் புதுஅகலில் வைத்துமூடி
தரைத்துமே புடமிட்டு யெடுத்துக்கொள்ளு
தாட்டிகமாய்க் கல்வமிட்டுத் தண்மைகேளு
கரைத்துமே அன்னமென்ற நீராலாட்டி
கணக்காகப் பணிரெண்டு சாமமாட்டி.
வரைத்துமே புடமிட்டு யெடுத்துக்கொள்ள
வாகான குருவாகும் வடிவுமாமே. (298)

வடிவமா யிக்குருவைத் துருசுசெம்பில்
வாகாக றைண்டுக்கு ஒன்றுதாக்கத்
துடிவமாய் நொருங்கியது தூளுமாகும்
துணையாக வெள்ளியெட்டில் ரெண்டுதாக்க
கடிவமா யுருக்கியெடு நாலத்தொன்றுக்
கனிவாகத் தங்கமிட்டு ஊதிப்போட
படிவமாய் மாத்ததுவும் யெட்டதாகும்
பண்பாக நானூரிற் பாலித்தேனே. (299)

பாலித்தேன் வயித்தியமும் யெழுநூற்பாடி
பதிவாக களங்குமுன் னூறுசொன்னேன்
ஆலித்தேன் ரெண்டுமுன் னூறுபாடி
அடைவாக ரெண்டுநூற் றன்பத்தைந்து
சாலித்து ரெண்டுஐம்பத் தைந்துதானும்
சரியாகப் பதினாறு பாடித்தேர்ந்து
வாலித்தேன் சுண்ணமென்ற அறுநூற்பாடி
வகையாக யிதுவெல்லாஞ் சுருக்கினேனே. (300)

சுருக்கியே பஞ்சமித்திரம் முன்னூறாகச்
சுருதிபெறத் தண்டகமும் நூற்றிப்பத்தாய்
பருக்கியே குகைபாகம் உலையின்பாகம்
பதமாக மித்திரத்தின் பரிசுபாகம்
நெருக்கியே செம்பெடுக்கும் பாகமோடு
நிலையாகத் தங்கமிடும் பாகமெல்லாம்
வருக்கியே புடபாகம் இதிலேசொன்னேன்
வடிவாகப் பாடினேன் வண்மைதானே. (301)

வண்மையாய் நபிமாரை வணங்கும்பாகம்
வரிசையுடன புடமிரங்கு மார்க்கங்கூட
தன்மையாய் மயிலிறகுச் செம்பின்பாகம்
தாட்டிகமாய்ச் சரக்கோடு தண்மைசொன்னேன்
உண்மைமிகக் கண்டதொரு வாதிமார்கள்
உற்றுமே யென்றன்றூ லெல்லாம்பார்த்துத்
தண்மையாய் மனதிலெண்ணிச் செய்வோர்தன்னை
தாட்டிகமாய் சுத்தரச வாதியென்னே. (302)

சுத்தரச வாதிதா னென்னூலெல்லாம்
சோதித்துக் களங்குமுதல் செந்தூரங்கள்
முத்தாய்ப் பாகமாய்ச் செய்துகொண்டால்
மூவுலகில் நபிமாராய் முழுதும்வாழ்வார்
நித்தியமாய் நிர்மலமாய் நிரைந்தபோது
நிர்ணயமாய் வாதம்வரும் யாகோபுசொன்னார்
சித்தராய்த் திரிவார்கள் பாக்யமாவார்
சிறப்பான முன்னூறு முற்றுந்தானே. (303)

யாகோபு அருளிச்செய்த பஞ்சமித்திரம்-300
முற்றுப்பெற்றது.

உ

பரமபதி துணை.

ஓலை எட்டுப்பிரதிகளிலிருந்து புதிதாய் அச்சிட்ட

வைத்திய சாஸ்திர விளம்பரம்.

அகஸ்தியர் அமுதகலைக் கியானம் 1200	1	0	0
ஷை மட்டம்	0	12	0
ஷை செந்தூரம் 300	0	7	0
ஷை மட்டம்	0	6	0
ஷை பரிபூரண சூஸ்திரம் 216	0	7	0
ஷை மட்டம்	0	4	0
ஷை பூரணம் 205	0	6	0
ஷை பரிபாஷை 500 மட்டம்	0	6	0
ஷை பரிபாஷை 300	0	8	0
ஷை வைத்திய ரத்தினச் சுருக்கம் 360	0	8	0
ஷை மட்டம்	0	4	0
ஷை பரிபூரணம் 400	0	6	0
ஷை கர்மகாண்டம் 300	0	6	0
ஷை குருநாடி 235	0	4	0
ஷை வைத்தியகாவியம் 1500	0	12	0
ஷை பாலவாகடம் 1200	0	14	0
ஷை பாலவாகடம் 300	0	8	0
ஷை மாந்திரீககாவியம் 1000	0	10	0
ஷை ஜாலநிகண்டு 200	0	5	0
ஷை சரக்குசுத்தி 150	0	2	0
ஷை திருமந்திரம் 1500	1	4	0
ஷை ஜாலசூஸ்திரம் 500	0	6	0
சுப்பிரமணியர் ஞானம் 500	0	8	0
ஷை ஞானம் 200	0	5	0
ஷை மட்டம்	0	4	0
உரோமர் வைத்தியம்	0	8	0
ஷை பரிபாஷை 300	0	8	0
புலஸ்தியர் வாதசூஸ்திரம் 300	0	8	0
நந்தீஸ்வரர் கருக்கடை 300	0	8	0
ஷை நிகண்டு 300	0	8	0
புலிப்பாணிவைத்தியம் 500	0	10	0
ஷை மட்டம்	0	4	0
ஷை ஜாலம் 300	0	4	0
ராமதேவர் சிவயோகம் 200	0	6	0
சட்டமுனிஞானம் 200	0	6	0
கரூவூரார் வாதகாவியம் 700	0	12	0
ஷை அட்டமாசித்து 100 மந்ரசக்கரங்களும்	0	4	0
பிரம்மமுனிகருக்கடை 380	0	8	0
அகஸ்தியர்தீட்சாவிதி	0	2	0
தன்வந்திரிசிமிட்டுரத்தினச்சுருக்கம் 371	0	8	0
திருவள்ளுவர் ஞானவெட்டியான் 1500	1	0	0
ஷை ஞானவெட்டிநயம்	1	4	0
ஷை உரைநயம்பதிப்பு	2	0	0
ஷை நவரத்தின சிந்தாமணி	0	12	0
பதினெண்சித்தர் நாடி சாஸ்திரம்	0	12	0
வைத்தியசாரசங்கிரகம்	1	8	0
ஷை மட்டம்	0	12	0
மலையகராதி	0	6	0
வைத்திய மூலிகையகராதி	1	0	0

யோக ஞான சாஸ்திரத் திரட்டு.

வைத்திய வாத யோக ஞான சாஸ்திரத்திரட்டு 10 பாகம் வரை அச்சிட்டுத் தயாரிலிருக்கிறது பாகம் 1-க்கு விலை ரூபா	1	0	0

இர்மதேவராயிருந்து மக்கத்திற்குப் போன பின்பு யாகோபு என்று பேர்வகித்து சொல்லிய சாஸ்திரங்கள்.

வைத்தியசிந்தாமணிஎழுநூறும், அதன் சூஸ்திரம்50சேர்ந்தது	1	0	0
லோகச்செந்தூரம்300	0	8	0
ஷை சூஸ்திரம் 150ம் ஷை சுருக்கம் 55ம் சேர்ந்தது	0	7	0
சுண்ணம் 300	0	8	0
வாதவைத்தியம் 400	0	12	0
ஷை வைத்திய களங்கு 300	0	8	0
சுண்ணகாண்டம்600	1	0	0
ஷை சூஸ்திரம் 150ம் ஷை சுருக்கம் 50ம் சேர்ந்தது	0	7	0
பஞ்சமித்திரம் 300	0	8	0
தண்டகபட்சணி110ம் இடையபாகம் 16ம் செய்பாகம் 16ம் சேர்ந்தது	0	7	0

அச்சிட்டுத் தயாரிலிருக்கிற யோகஞான சாஸ்திரங்கள்.

1-வதுபாகம் திருமூலர் சுப்பிரமணியர் முதலான சித்தர்கள் ஞானக்கோவை	1	0	0
2-வதுபாகம்போகர் காலாங்கிமுதலான சித்தர்கள்ஞானகோவை	1	0	0
3-வது பாகம் கடைப்பிள்ளைபுசுண்டர்முதலான சித்தர்கள் ஞானக்கோர்வை	1	0	0
4-வதுபாகம்மச்சமுனிவர்முதலான சித்தர்கள்ஞானக்கோவை	1	0	0
5-வதுபாக சுந்தரானந்தர் முதலானசித்தர்கள்ஞானக்கோர்வை	1	0	0
6-வதுபாகம்இராமதேவர்முதலான சித்தர்கள்ஞானக்கோர்வை	1	0	0
7வதுபாகம்சட்டமுனிமுதலானசித்தர்கள் ஞானக்கோர்வை	1	0	0
8வது பாகம் உரோமரிஷியார்முதலானசித்தர்ஞானக்கோர்வை	1	0	0
9-வதுபாகம் கருவூரார் முதலான சித்தர்கள் ஞானக்கோர்வை	1	0	0
10வது அகஸ்தியர்சில்லரைஞானக்கோர்வை	1	0	0

இப்புத்தகங்களும், புராண இதிகாசங்களும் பாவலர் நாவலர்களுக்குவேண்டும் இலக்கண இலக்கிய புத்தகங்களும், நவீன நாவல்களும், நாடக புத்தகங்களும், மகமதியர்களுக்கு உரிய புத்தகங்களும் நாநாவிதமான சில்லரைப் புத்தகங்களும் எராளமாயிருப்பதால் அவரவர் விரும்புவதை அடியிற்கண்ட விலாசதாரிடம் நேரிலும் வி. பி. மூலமாகவும் கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு,

இ. ராம. குருசாமிக்கோனார்,

புத்தக ஷாப் புதும்ண்டபம், மதுரை.